
ரத்த
அழைப்பிதழ்
பி.டி. சாமி

# Contents


1

2

3

4

5

6

7

8

9

10

11

12

13

14

15

16

17


# 1

காமினியின் மென்மையான பூ நெஞ்சம் இப்பொழுது இறுகிப்போய் கரும் பாறையாக மாறியிருந்தது. எந்தப் பெண்ணுமே மனதால்கூட நினைக்க

அஞ்சும் ஒரு பயங்கரமான காரியத்தைச் செய்யும் துணிவு பிறந்திருந்தது.

அந்தத் துணிவு...

பல கோடிகளுக்கு அதிபதியான அம்பரீஷுக்கு ரத்த அழைப்பிதழ் கொடுத்து அவனை கொடூரமாகச் சித்திரவதை செய்து, கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்ல வேண்டும். அவன் சந்திக்கும் மரணம் மிக மிகப் பயங்கரமானதாக இருக்க வேண்டும்.

அம்பரீஷ் சுலபமாக கொன்றுவிடும் அளவுக்கு சாதாரண நபர் அல்ல... ஏராளமான எடுபிடி ஆட்களுடன் மிக வசதியாக-ஆடம்பரத்தின் எல்லையில் வசித்து வருகிற ஒரு தீயவன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் சைக்கிளில் வந்து குறைந்த மூலதனத்தில் கடன்கொடுத்து வட்டி வியாபாரம் செய்தவன், இன்று அம்பரீஷ் ஃபைனான்ஸ் என்ற பெரும் நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டர்.

அம்பரீஷ் ஹோட்டல் ரிஸார்ட்ஸ் என்ற பீச் ஹோட்டல்- டீ எஸ்டேட்ஸ் மரச்சீனிக் கிழங்குத் தோட்டம்- தென்னந் தோப்புகள் - உப்பளங்கள் என்ற நிறுவனங்களின் சொந்தக்காரன்.

எப்படி இத்தனை வசதிகள்? லாட்டரி அடித்ததா? இல்லை...

சீமான் குருமூர்த்தி என்ற பெயரை கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

இங்கே அல்ல... கேரளத்திலுள்ள கொச்சியிலும் எர்ணாகுளத்திலும் அவனைப் பற்றி விசாரிக்க

வேண்டும். அந்தப் பெயரைத் தெரியாதவர்களே இருக்க முடியாது.

எப்படி? சீமான் குருமூர்த்தி மலையாள மண்டல் என்ற நாளிதழின் ஆசிரியர்-உரிமையாளர் புரட்சிக ரமான பத்திரிகையாளர் என்று புகழப்பட்டு வருகி றவன் - அவனையும் அவனுடைய பத்திரிகையை யும் பார்த்து விட்டால் அரசாங்கமே நடுங்குகிறது.

அவனும் அம்பரீஷும் எல்லா விதங்களிலும் பார்ட் னர்கள் - கூட்டாளிகள் பாவங்களுக்கும் சேர்த்துத் தான்!

காமினி அந்தக் காலை நேரத்திலேயே அமைதி யற்ற நெஞ்சோடு தவிதவித்து அறையினுள் நடை போட்டுக் கொண்டிருக்கிறான். அவள் இந்த அள வுக்கு என்றைக்குமே பதட்டமடைந்ததில்லை.

அதற்குக் காரணம்

அம்பரீஷின் கழுகுப் பார்வை தங்கை சுரபி மீது விழுந்து விட்டது. சுரபியை இன்று இரவு அவனு டைய படுக்கையறைக்கு அனுப்பி வைக்க வேண் டும். அவளுடைய கற்புக்கு ஈடாக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து வசதியாக வாழ வைப்பானாம்.

தங்கை சுரபி சின்னஞ்சிறு மலர்-மொக்கு அவிழ்ந்து மணம் வீசும் ஜாதி மல்லிகை- அந்த மலர் அவ னுக்கு வேண்டுமாம்!

அவளை விரும்புகிற அம்பரீஷுக்கு வயது நாற்பத்தி ஐந்து! இவளுக்கு வயது பதினாறு மாணவி

சென்ற ஆண்டு தன்னுடைய அக்கா நிருபமா- அவ னுடைய ஹோட்டலில் விதவிதமான நடனங்களை

ஆடிக் கொண்டிருந்தவள். திடீரென்று காணாமல் போய்விட்டாள். அவள் எங்கே போனாள் என்பதும் தெரியவில்லை. உயிருடன் இருக்கிறாளா என்பது கூட சந்தேகமாக இருக்கிறது. அவளுடைய காதலன் பொன்ராஜனுடன் எங்கேயாவது ஓடிப்போயிருக்கலாம்- அவள் என்ன ஆனாள்?

டாங்... டாங்... பத்து தடவைகள் மணி நாதமாக அடித்து ஓய்ந்தது.

காமினி காலைநேரத்தில் அவனை ஹோட்டல் அறையில் வைத்து சந்தித்த அந்த நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டதும் உடம்புச் சிலிர்த்து உரோமங்கள் நிமிர்ந்தன. பாவி மனிதனா அவன்? குரூரமான மிருகம்! பயங்கரமான அந்த நிகழ்ச்சி ஸ்லோமோஷனில் விரிகிறது.

# 2

அரபுக்கடலில் கரு நீலத்தை அள்ளிக் கொண்டு ஓங்கி எழுந்து மணல்கரையில் மோதி வெண்ணிற நுரைகளாக உடையும் அலைகளைப் பார்த்துக் கொண்டு விஸ்தாரமான அந்தச் சாலையில் அமைந்திருந்தது. அம்பரீஷ் ஹோட்டல் ரிஸார்ட்ஸ்

பிரம்மாண்டமான விசாலமான நிலப்பரப்பில் அந்த ஹோட்டல் அமைந்து இளம் பச்சை நிறப் பூச்சுகளுடன் அற்புதமாக இருந்தது.

அதிக உயரம் இல்லாத ஹோட்டல் அது. முதல் மாடியிலுள்ள சொகுசான அறையின் முன்னால்

நின்று கையை உயர்த்தி விரலைக் கொண்டு போய் பட்டனில் பதித்ததும்,

உள்ளே சங்கீத மணி அடித்து,

பதிலுக்கு இன்னொரு நாதம் ஒலித்ததும் வெளியே காத்துக் கொண்டு குழப்பமான பரபரப்புடன் நின்று கொண்டிருந்த காமினி கதவைத் தள்ளித் திறந்தாள். பார்த்தாள்

தரை பூராவும் உயரமான மெத்தை போன்ற விரிப்பு படர்ந்திருக்க அதன் மீது அம்பரீஷ் கால்களைப் பதித்து நடைபோட்டுக் கொண்டிருந்தான். விரல்களின் சந்திப்பில் புகையும் சிகரெட் அமர்ந்திருந்தது.

“குட்மார்னிங்”

அவள் சொன்னதும்- “லவ்லி குட்மானிங்” என்ற சொல்லோடு ஏறிட்டான்- சொன்னபோது விஸ்கி வாடை குப்பென்று ஓடிவந்து நாசியைத் தொட்டது. காமினி முகம் சுளித்தாள்

காலை நேரத்திலேயே மதுபானம் அருந்தி கண்களைச் சிவக்க வைத்திருக்கிறான்

அதிக உயரம் இல்லாத ஆனால் பருத்த உடம்பு- தலை முடிகள் ட்ரிம் செய்யப்பட்ட முகத்தில் மீசை இல்லை- உடம்பு இலேசான பழுப்பு நிறத்தில் கொழுத்த சீமைப் பன்றி போல் தெரிந்தான்.

இடுப்புக்கு வரிக்கோடுகள் இழுக்கப்பட்ட சிங்கப் பூர் சீனிபத்தாய் கைலியை காப்பிப் பொடி நிறத்தில் கொடுத்து சொருகி மேலே வட்டக் கழுத்து அரைக்கை பனியன் தந்திருந்தான். மார்பில் நீள

மான பொன் சங்கிலி கழுத்திலிருந்து பரவி மினுமி னுப்பது தெரிந்தது.

வயது நாற்பத்தி ஐந்து என்ற போதிலும் தாராள மான போஷாக்கின் காரணமாக குறைத்தே மதிப் பிடலாம்.

காமினி செம்பழுப்பு நிற உடம்புக்காரி - தலைமுடிக ளைக் குட்டையாக்கி காலையிலேயே தலைக்குக் குளித்து முடிகளை விரித்துப்போட்டு மலையாள பாணியில் சிறுபின்னல்கள் கொடுத்திருந்தாள்.

உடம்பு பளிங்குத்தனமாக இருந்த போதிலும் அங் கங்களில் ஒரு தளர்வு பிரதி பலிக்கத்தான் செய் தது. இரவில் ஆடிக் களைத்துச் சோர்ந்து போயி ருந்த அனுபவம் தெரிந்தது.

முகம் குண்டாக தாமரைப் பூ போல் அமைந்து கத்தி போன்ற கண்களையும் சத்துப் பிடிப்பான ரோஸ் உதடுகளையும் பெற்றிருந்தாள்.

“எதுக்காக போன் பண்ணி அவசரமாக வரச் சொன்னீங்க அங்கிள்.”

இவள் குழப்பமான மனத்துடன் எதைப் பற்றிப் பேசப் போகிறானோ என்ற அச்சத்துடன் கேட் டாள்.

“உட்கார் காமினி.”

ஷோபாவைக் காட்டி விட்டு அவன் அமர்ந்தான்

“பரவாயில்லை அங்கிள்... விடியற்காலை மூன்று மணி வரையில் புரோகிராம் நடத்தியதில் களைப் பாக இருக்கிறது. நான் நேரத்தில் விட்டுக்குப் போகணும்.”

அவன் கால் மேல் கால் தூக்கிப் போட்டுக் கொண்டு சிகரெட்டை உதடுகளால் முத்தமிட்டு உறிஞ்சி புகையை உள்ளுக்குள் இழுத்துச் சொற்ப மாய் வெளியேற்றினான்.

"அது எனக்கும் தெரியாதா! ம்... காமினி..."

காமினி பார்த்தாள்

அவனுடைய கண்கள் ரத்த நிறத்தை வாங்கியிருந் தன

அவன் சற்றுத் தயங்கிய போதிலும் ஒரு முடிவோடு நிமிர்ந்து பார்த்துச் சொன்னான்.

"உட்காரம்மா நமக்குள்ளே என்ன பேதம்?"

காமினி ஷோபா விளிம்பில் பின்பக்கங்களை அமர்த்தினாள்- மலர மலர விழித்துப் பார்த்தாள்.

"என்ன இங்க அங்கிள்?"

"வேறெ ஒண்ணுமில்லை. நேற்று சாயங்காலம் உன்னோட தங்கை ஸ்கூலிருந்து வந்ததைப் பார்த் தேன்- பஸ்ஸுக்காக வெயிட் பண்ணிட்டிருந்தாள்

என்னோட ஏ.சி. கார்ல லிப்ட் கொடுத்தேன்.

காமினிக்கு அது ஞாபகம் இருந்தது- வீட்டுக்கு வந்ததுமே சுரபி இதைச்சொல்லி முதலாளியின் குணத்தைப் புகழ்ந்திருந்தாள்

அப்போது இவளுக்கு எரிச்சலாகவே இருந்தது. முதலாளியின் குணம் எத்தகையது எந்த மாதி ரியானவன் என்பது இவளுக்குத்தானே தெரியும், ஆனால் அந்தக் குணத்தைப் பற்றியெல்லாம் அவ ளிடத்தில் சொல்ல முடியாது.

"அவளோட பேரு என்ன சொன்ன மிஸ் காமினி?"

இப்படிக் கேட்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லித் தான் ஆகவேண்டும்.

“சுரபி...”

“அமுது சுரக்கும் அமுத சுரபியா?”

இதற்கு என்ன பதில் சொல்வது? ரசாபாசமான உணர்வுகள் வேண்டாமே என்பதால் கீழுதட்டை மென்றுச் சமாளித்தாள்.

“காமினி...மை கேர்ள்... நான் சொல்ரதைக் கவனி... சுரபிக்கு இப்போது வயசு என்ன?”

இதுவும் தேவையில்லாத ஒரு கேள்வி தான்? வயது எத்தனையாக இருந்தால் அவனுக்கென்ன? இதற் கும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இல்லா விட்டால் கோபம் வந்து விடும்.

“பதினாறு”

“வெரிகுட்... இந்த ஏஜை நான் ரொம்பவும் லைக் பண்றேன்... இதுதான் டீனேஜ் - ஏஜை மட்டுமல்ல உடம்பையும்... மாந்தளிர் உடம்போடு அம்சமாக இருக்கிறாள்.”

‘மாந்தளிர் உடம்பு அம்சம்’ காமினியின் நெஞ்சுப் பிரதேசம் சூடாக ஆரம்பித்தது. ஆனாலும் பார்த் ததும் வித்தியாசம் தெரியாதபடி புன்னகைக்கத் தொடங்கினாள்.

உதடுகளில் எச்சில் நீர் சுரந்து வழிவதையும் கவ னிக்காமல் ஆழ்ந்த ரசனையுடன் இருந்தான்.

"ம்... உன் பேரென்ன... காமினியா...? மறந்துட்டேன்... காமினி... எனக்காக நீ ஒரு உதவி செய்யனும்."

என்ன என்பது போல் இவள் பாத்தாள்.

"உன்னோட தங்கை சுரபியை நான் இன்னிக்கு ராத்திரி சந்திக்கனும் அனுப்பி வைக்கிறியா!"

தக்கென்று நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று இடித்தது - இருதயம் படபடத்தது உச்சஸ்தாயியில் துடிக்க ஆரம்பித்தது. குபீரென்று பொங்கிய ஆத்திரத்தில் உடம்பு பூராவும் உஷ்ணமாய் வியர்த்தது.

தங்கையை அனுப்பி வைக்கவேண்டுமாமே. தங்கையை...

தங்கை என்பவள் யார்? கிள்ளுக் கீரையா? குப்பைக் காகிதமா?

ஏ... பெரிய மனிதா... காலிப்பயலே... என்னடா ஆழம் தெரியாமல் காலை விட்டுப் பார்க்கிறாய்? உன் இருதயத்தைப் பறித்தெடுத்து வெற்றி வீரர் கபில்தேவின் மட்டையில் பட்டோடும் கிரிக்கட் பந்துபோல் அடித்து விளையாடி விடுவேன்

இப்படி இவள் உள்ளூர நினைத்து ஆவேசமானாள். ஆனால் இதையெல்லாம் நேருக்கு நேர் சொன்னால் ஆகாது.

"என் எஜமானரே... என் இனிய அங்கிளே.... நான் கேட்பதைத் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது சுரபியை எதற்காக நீங்க சந்திக்கனும் எங்கிறதை நான் தெரிஞ்சுக்கலாமா?

"அதை நான் ஓபனாகச் சொல்லலே... இப்போது சொல்லிடுறேன்... சுரபி ராத்திரி பூராவும் என்

னோட ரூமில ஆசை நாயகியாக இருக்கணும்... விடியற நேரத்தில அதாவது அதிகாலை ஐந்து மணிக்கு உன்னோட வீட்டில் பத்திரமாக ஒப்ப டைத்து விடுவேன்.”

அந்த வார்த்தைகள் காற்றலைகளில் கலந்து ஓடி வந்து காதுகளைத் தொட்டதும் ஹிரோஷிமோவில் அணுகுண்டு வெடித்தபோது அந்த ஊர் மக்கள் அதிர்ந்தது போல்

இவளும் குலுங்கிப் போனாள்.

ஸ்டாப் பிளாக் மூவிபோல் உடம்பின் இயக்கம் நின்று அதன்பிறகு வெப்ப வியர்வையோடு - ஏகப் பட்ட இருதயத் துடிப்புடன் இயங்க ஆரம்பித்தது.

இந்த இடத்திலேயே கையை மடக்கி ஓங்கி குடமி ளகாய் மூக்கைக் குறிபார்த்துக் குத்தி விடலாமா?

அவ்விதம் செய்யக் கூடாது. இப்போது பேசிக் கொண்டிருக்கும் இடம் - அம்பரீஷ் ஹோட்டல் ரிஸார்ட்ஸ்- இங்கே இவனுடைய அடியாட்கள் ஏரா ளம் இருப்பார்கள் தன்னுடைய எண்ணத்தை அப் படியே பிரதிபலித்தால் உயிர் வாழ அனுமதிக்க மாட்டார்கள்

இவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும். இவனுக்கு மட்டுமல்ல... இவனைப் போன்ற மன நிலையில் இருக்கும் மற்றவர்களுக்கும்!

மனம் இரும்பு உலையைப் போல் தீக்குழம்பு டன் தகதகவென்று கொதித்த போதிலும் வினாடி நேரத்தில் ஒரு முடிவுக்கு வந்து விட்டதால் அமை தியாகப் போகலாம் என்ற எண்ணத்துடன் குளிர்ந் தாள்

உருக்கமான வார்த்தைகளின் மூலம் எத்தகைய மனிதனின் எஃகு மனதையும் கரைத்து விட முடியும்.

“அங்கிள்... நான் ஒரு நடனக்காரி... நடனம் ஆடுவது என்னுடைய தொழில்... என் உடலின் நளினங்களை ரசிகர்களின் கண்களுக்கு உரிமையாக்கி அவர்களுக்கே என்னை ஒப்புக் கொடுத்தும் என் கடமையைச் செய்து கொண்டிருக்கிறேன். சந்தர்ப்பச்சூழ்நிலைகள் காரணமாக வேறு வழியின்றி என் உடம்பைத் தொட உங்களையும் வேறு சிலரையும் அனுமதித்திருக்கிறேன். ஆனால் என் தங்கை அப்படியல்ல,செகன்டரி ஸ்கூல் மாணவி.”

சொல்லிக் கொண்டிருக்கும்போதே கண்களில் நீர் தழும்பியிருப்பதால் குனிந்தால் -

பொலபொலவென்று உதிர்ந்து வழிந்து விடும்.

அவன் மோவாயைத் தடவிக் கொண்டு, ஆசை வழியும் கண்களை ஒடுக்கிக் கொண்டுச் சிரித்தான். ரசனைப் புன்னகையுடன் வழிந்தான் சொன்னான்.

“தெரியும் என் அருமை காமினியே... அவள் ப்யூர் ஹனியாக- கூர்க்தேன் - மலைத்தேன் எல்லாவற்றையும் மிஞ்சும் விதத்தில் இருப்பதால்தான் அவளோட சந்தன உடம்பின் மீது ஆசைப்படறேன். என் குணம் உனக்குத் தெரியும். ஒரு பொருளை நான் விரும்பி விட்டால் அதை அடையாமல் நான் தோல்வியடைந்ததே இல்லை. எனக்கு இன்று ராத்திரியே சுரபி வேணும்... அவளைக் கொண்டு வந்து தர வேண்டியது உன்னோட பொறுப்பு.”

குரலின் கடுமை அப்பொழுது தெரிந்த கண்களின் பார்வை- குபீரென்று மாறிய முகம் இவளுடைய நெஞ்சுப் பிரதேசத்தை இடியாகத் தாக்கின.

இது எப்படி முடியும்?

தங்கையோ பசுந்தளிர்... வாழ வேண்டிய சின்னஞ் சிறு மலர் - தங்கையாகப் - பிறந்து விட்டாள் என்ற ஒரே காரணத்துக்காக அவளுடைய அழகான உடலை கனவான்களிடம் தர முடியுமா?

முடியாது! கூடாது! கலை என்ற பெயரால் துவக் கப்பட்டு குரூர மனித மிருகங்களின் கூர்மையான நகங்களால் குத்திக் கிழிக்கப்பட்ட தன்னுடைய இழிவான வாழ்க்கை - தன் ஒருத்தியுடனேயே முடிந்து போகட்டும்,

தங்கையும் தன்னைப் போலவே பலியாக வேண் டாம்.

காமினி குபீரென்று அவனுடைய கால்களில் சரிந்து விழுந்துப் பிடித்துக் கொண்டு கண்ணிரின் வீறிடலாய்ச் சொன்னாள்,

“அங்கிள்... என்னை மன்னித்து விடுங்கள். நானே அழைத்து வந்து உங்களிடம் ஒப்படைத்தாலும் சுரபி சம்மதிக்கமாட்டாள் - தலையிலுள்ள ஒரு முடியைக் கூட எந்த ஆண் பிள்ளையையும் தொட அனுமதிக்க மாட்டாள்.

அவன் அலட்சியமான எக்காளச் சிரிப்புடன் இவ ளைப் புறக்கணித்தான்.

“பேதாய்... பேதாய்... உன்னுடைய பேதமைத் தனம் இன்னும் போகலை பார்த்தியா...” சொல்லிவிட்டு

கால்களை உதறி விடுவித்துக் கொண்டு எழுந்த அவன் கீழே பார்த்தான்

தரை விரிப்பில் இவள் மண்டியிட்டு உட்கார்ந்து மேலே பார்த்துக் கொண்டிருந்தாள் கண்களில் நீர் பொங்கி வந்த வண்ணம் இருந்தது.

தொடர்ந்தான்.

“காமினி... சுரபி எப்படிப் பட்டவளாக இருந்தாலும் நீ கவலைப் படவேண்டாம். என்னுடைய ரூமுக்கு அவள் வந்ததும் நான் பார்த்துக் கொள்கிறேன்.”

இன்னும் இவள் குபீரென்று வியர்த்தாள்

பாவி... நீ உருப்படுவாயா? மலரத் துடித்துக் கொண் டிருக்கும் ஒரு மொக்கை நாசமாக்கத் துணிகி றாயே... முறையாக மனைவியுடன் வாழ்ந்து வந் திருந்தால் சுரபியை விடவும் வயதில் அதிகமான மகள் இருப்பாளே!

“வேண்டாம் அங்கிள் உங்கள் ஆசைகளுக்கு அவள் சரிப்பட்டு வரமாட்டாள்.”

*வரமாட்டாளா...? சுரபி திமிராக பிடிவாதம் பிடித் தால் என்ன நடக்கும் தெரியுமா நிருபமா உன் னோட உடன் பிறப்புத்தானே... அதாவது நீயும் அவளும் ரெட்டையர்கள்...”

“ஆமாம்...”

“உன்னைப் போலவே அவளும் அழகி... ரெண்டு பேர்களும் ஒரே அச்சில் வார்த்து எடுத்தது போல் இருப்பீர்கள்... நான் சொல்லுவது சரிதானே?”

தலையசைப்பின் மூலம் இவள் ஒப்புக் கொண் டாள்.

“அவள் இப்பொழுது எங்கே?”

“எனக்குத் தெரியாது”

“அதாவது அவள் பொன்ராஜ் என்பவனுடன் ஒரு மாதத்திற்கு முன்பே ஓடிப்போய் விட்டாள்... ஐயம் கரெக்ட்?”

“சரிதான்!”

“அவனுடன் ஓடிப்போன அவளை நீயும் தேட வில்லை... இதுவும் சரிதானே?”

“ஆமாம்...”

“இனி நீ அவளைத் தேட வேண்டாம்... தேடினாலும் கிடைக்க மாட்டாள்-ஏனென்றால் நான் அவளைக் கடத்திக் கொண்டு வந்து சிக்மகளூருக்கு அழைத் துச் சென்று பலவந்தமாகக் கற்பழித்துக் கொன்று விட்டேன்.”

போதையில் அவன் ஏகப்பட்ட சந்தோஷத்தில் இதைச் சொல்ல -

காமினி மனம் உடைந்து நொறுங்கிப் போனாள்.

உடன் பிறந்தச் சகோதரி- இரட்டையர்களில் ஒருத் தியான அவள் சிலமணி நேரங்களுக்கு முத்த அக்கா இதுவரையிலும் அவளுடைய காதலனு டன் எங்கேயோ ஓடிப்போய் வாழுகிறாள் என்று தான் இந்த நிமிஷம் வரையில் நினைத்துக் கொண்டிருந்தாள்.

அது பொய் என்று இவனுடைய கூற்று கூறுகிறது.

ஆனால் இது நிஜமாகவே நடைபெற்ற நிகழ்ச்சி தானா?

அவனே தொடர்ந்தான்.

“காமினி... எப்படிக் கொன்றேன் தெரியுமா?”

“.....”

“ந்யூ மெதட்டில் பயங்கரமாகக் கொலைசெய்தேன். எப்படி...?”

சொன்னவன் கப்போர்டைத் திறந்து உள்ளேயிருந்த சிறிய நீள சதுரப் பெட்டியை எடுத்தான்- திறந்தான்- முகத்தருகே கொண்டு வந்து காட்டினான்.

அவள் எழுந்து நின்று அதைப் பார்த்தாள்.

சிறிய ஊசி முனை பொருத்தப்பட்ட தாலைந்து சிரிஞ்சிகள் வரிசையாக சீப்புபோல் அடுக்கப்பட்டிருந்தன, ஏராளமான கரும் சிவப்பு நிற அமிலத்தைக் கொண்ட கண்ணாடி டீயூப்களும் வைக்கப்பட்டிருந்தன,

அவன் அசிங்கமான பல்லிளிப்புடன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு கண்ணடித்தான்

சிரிஞ்சியை எடுத்து டியூப்பினுள் இருக்கும் கெமிக்கல் லிக்கியூடை எடுத்து பாடியில் இஞ்சக்ட் பண்ணிவிட்டால் உடனடியாக ரியாக்ஷன் ஏற்பட்டு உறுப்புக்கள் செயலிழந்து விடும் அர்த்தம் புரிகிறதா?”

காமினிக்குப் புரிந்தது.

இது அவன் வழக்கமாகப் பயன்படுத்தும் இஞ்செக்ஷன்தான் புதிதாக அழைத்து வரப்படும் பெண்கள் முரண்டு பிடித்தால் இதையே பயன்படுத்துவான்- அவளால் எதிர்க்க முடியாது.

இப்படி தங்கள் புனிதத்தைப் பறிகொடுக்கும் இளம் பெண்கள் பலர் என்பது காமினிக்கு தெரியும்

ஆனால் அவர்களில் எந்தப் பெண்ணின் மானத்தையும் இவளால் காப்பாற்ற முடியவில்லை.

அந்தப் பெண்களின் தலைவிதியை நினைத்து நொந்துப் போயிருந்த காமினிக்கு இந்தப் புதிய செய்தி தலையைச் சுழல வைத்திருந்தது.

“காமினி... இப்பொழுது புரிகிறதா? சுரபியை என்னால் எப்படியும் பணிய வைத்துவிட முடியும். நமக்குள் சமரசம் செய்து கொள்வோம்... சுமுகமாக... வளமாக வாழ்வோம் எப்படி?”

யோசிப்பதற்கு இவளுக்கு நேரம் இல்லை நொடிப் பொழுதில் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டதால் புன்னகையை உதடுகளில் விளம்பரம் செய்தாள்.

“நீங்க பலே ஆள்.... சுரபியை நீங்க துன்புறுத்த வேண்டாம். அவளை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்... ஆனால் அவளை என்னால இங்கே அழைத்து வர முடியாது.”

“ஏன்... ஏன்?”

“சுரபியை நான் இங்கே அழைத்து வந்தால் பார்க்கிறவர்கள் அவள் விபச்சாரி என்ற முடிவுக்கு வந்து விடுவார்கள். ஸோ... அங்கிள்... நான் கூப்பிட்ர இடத்திற்கு நீங்கள் வர வேண்டும்.”

“என்னை நீ அழைக்கிறீயா?”

“ஆமாங்க... என் தங்கச்சியோட முதல் இரவு சாந்தி முகூர்த்தத்திற்காக உங்களுக்கு அழைப்பிதழ் தர்றேன்...”

இவள் சொல்ல- அவன் 'கட கட' வென்றுச் சிரித்து விட்டான்.

“டி...காமினி... நான் பயங்கரமான ஒரு செய்தியைச் சொன்ன போதிலும் தாங்கிக் கொண்டு சுலபமாகச் சிரிக்கிறாயடி...”

“அங்கிள்... ஒரு முக்கியமான கொஸ்டியன் என் சகோதரி செத்துப் போயிட்டாள் என்கிறதுக்கு என்ன ஆதாரம் இருக்கிறது.”

அவன் சத்தியம் செய்தான்

அதைக் கேட்டதும் இருதயம் துணுக்குற்று ரத்தத்தை வேகமாக ஓடவிட்டது.

சகோதரி உயிரோடு இருந்தால் கூட இத்தகைய மாபாதகனை கொல்லுவது பாவமாகாது... அவனைப் போன்றவர்கள் கொல்லப் பட்டே ஆக வேண்டும்,

அவள் கவரில் தொங்கிக் கொண்டிருந்த தினசரி காலண்டரின் இன்றைய தேதிக் காகிதத்தை அடிப்பாகத்திலிருந்து விடுவித்து எடுத்தாள். மேஜையின் மீது குண்டூசி டப்பா தெரிய ஒரு குண்டூசியை எடுத்து -

ஆள்காட்டி விரலை நீட்டி கூர்மையான குண்டூசியின் நுனியில் வைத்தாள்-துணுக் கென்று ரத்தத் துளி எட்டிப் பார்த்தது.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இவள் ஏன் இப்படிச் செய்கிறாள்? காமினி எப்போதுமே புதிர் போன்றவள். மற்றவர்களுக்குத் திகைப்பைக் கொடுத்து விநோதமாய் எதையாவது செய்து கொண்டே இருப்பாள். இவள் மர்மமாக எதையாவது செய்து குறும்பு தனமாக விளையாடிக் கொண்டிருப்பாள்:

அத்தகைய விளையாட்டுகளில் இதுவும் ஒன்றா ?

துளிர்த்து நின்ற செந்நிற ரத்தத் துனியை காலண்டர் டெய்லி லீட்டில் தடவினாள்- ஓர் அபூர்வமான புன்னகையோடு கொடுத்தாள்.

“இதென்ன வேடிக்கை காமினி... எனக்கு இது நீ கொடுக்கும் ரத்த அழைப்பிதழா!”

அவன் கேட்டான்-இன்னும் குழப்பமடைந்து...

காமினி புருவங்களை மேலேற்றிக்கொண்டு சொன்னாள்.

ஈறுகள் சுத்தமாக தெரியும்படிச் சிரித்தாள்.

“ரத்த அழைப்பிதழில் ஒரு தத்துவம் இருக்கிறது. ரத்தம் சிந்துவது தியாகத்தின் ஆரம்பம்... ஒரு பெண் செய்யும் தியாகம் ரத்தத்தின் அடிப்படையைக் கொண்டதுதானே!”

அவனுக்கு அது புரியவில்லை. அவனுடைய குழப்பமான அறிவுக்கு மேன்மேலும் தடுமாற்றத்தை உண்டு பண்ணியது... இருப்பினும் விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ள நேரமும் இல்லை.

“ஏதோ ஒன்று... சரி...”

“இன்னொரு முக்கியமான விஷயம்... சுரபியை அழைத்துக் கொண்டு இங்கே வர முடியாது.”

“அது தான் முன்பே சொன்னியே நீ எங்கே அழைக்கிறியோ அங்கே வருகிறேன்”

இவள் ஏற்கனவே தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்திருந்ததால் கண்களில் மட்டும் போலியாக ஒரு மையலைக் கொடுத்துவிட்டுச் சொன்னாள்.

“கனடா நாட்டில் ஒட்டாவோ நகரில் ஸெட்டிலாகி யிருக்கும் நட்பரசன் பங்களா.”

“நட்பரசன் பங்களாவா? உனக்கு அவன் அன் பளிப்பாக விட்டுச் சென்ற கேனன் காட்டேஜ் ஆயிற்றே. மலைப்பிரதேசத்தில் மிகுந்த ஆழத்தில் ஓடும் ஆற்றங்கரையில் அல்லவா அமைந்திருக்கி றது. அக்கம் பக்கத்தில் வீடுகள் கூட கிடையாதே?”

“வீடுகள் இல்லாத இடம்தானே நமக்குப் பாது காப்பு... யாரும் வரமாட்டார்கள்” சொல்லிவிட்டு இவள் கண்ணடித்துச் சிரித்தாள். சிரித்துக் கொண்டே அவனை அடிப்பது போல் கையை ஓங் கிக் கொண்டு முன்னுக்கு வர அவனும் தன்னை மறந்துச் சிரித்து விட்டான்.

இவள் ரத்த அழைப்பிதழ் கொடுத்து மரண விளை யாட்டுக்குக் கூப்பிடுகிறாள் என்பது அப்பொழுது அவனுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை.

# 3

காமினியின் நெற்றியில் வியர்வை முத்துக்கள் அரும்பியிருந்தன.

தன்னுடைய டம்பப் பையின் வாயை விலக்கி உள்ளே பார்த்தாள்

சிறுசிறு கண்ணாடி டியூப்கள்-கூர்மையான முனை யுடன் உள்ள ஊசியை வாங்கிக்கொண்டு படுத்தி ருக்கும் நிலையில் சிரிஞ்சி

இவற்றை காமினி திருடிக் கொண்டு வந்திருக் கிறாள். அம்பரீஷ் இவற்றைப் பயன்படுத்தித்தான்

பணிய மறுக்கும் பெண்களைச் சீரழித்திருக்கிறான்- தங்கையின் உடம்பைக் கேட்கும் அவனுக்கு இது தான் பரிசு.

யோசிக்கிறாள் -அறையினுள் வட்டமடித்துக் கொண்டே –

அம்பரீஷ் சொன்ன அக்கா மரணம் பற்றி செய்தி உண்மையா? இவ்வளவு துணிச்சலாக அதைச் சொல்லுவானா? அவனே ஒப்புதல் வாக்குமூலம் போல் நடந்த நிகழ்ச்சி விவரிப்பானா?

ஏன் மாட்டான்! அவனைப் பொறுத்த வரையில் யாரும் தன்னை எதுவும் செய்ய முடியாது என்பது தெரியும். யார் யாரை சரிக்கட்டி என்னென்ன காரி யங்கள் செய்ய வேண்டும் என்பதெல்லாம் அவ னுக்குத் தெரியும்.

அவனை எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும் வெல்ல முடியாது. கொலை செய்து உடலை பட கில் எடுத்துச் சென்று கயிறு கட்டி நடுக்கடலில் இறக்கி விடுவான்.

தன் சகோதரியை அவன் கொலை செய்ததாகச் சொன்னது பொய்யாக இருந்தால் கூட அவன் மீது இரக்கமே காட்டாமல் தண்டித்தே ஆகவேண்டும். ஏனென்றால் அவன் உயிரோடு இருப்பது வரை யில் இன்னொரு சகோதரியான சுரபிக்கு ஆபத்து.

“அக்கா...”

திடீரென்று கேட்ட அந்தக்குரல் தங்கை சுரபியினு டையது. காமினி டம்பப் பையை மூடிவிட்டு பார்த் தாள்.

சுரபி ஒரு புஷ்பமாய் வந்து கொண்டிருந்தாள் - கண்களில் மலர்ச்சி தெரிய ஆரோக்கியமான உத டுகள் அற்புதமாக மலர்ந்திருந்தன.

பதினாறு வயதில் நடைபோடும் அவள் செம்பு கலக்காத பொன்னிடமிருந்து நிறத்தை இரவல் வாங்கியிருந்தாள். கண்களை மானும் முகத்தை ஊட்டி ரோஜாப்பூவும் தானமாக வழங்கியிருந்தன.

அளவான உயரத்தில் கச்சிதமாகப் பொருந்தும் அளவுகளில் உறுப்புகள் அமையப்பெற்று நீல ப்ள வுஸ் அணிந்து அதே நிற பட்டுப்பாவாடையில் ரோஸ் நிறத்தில் சரிகை இழையோடிய ஒற்றைத் தாவணியில் அம்சமாக மலர்ந்திருந்தாள்.

தாவணிக்கு மேலே மார்பில் டாலருடன் கூடிய பொன் சங்கிலி நீளமாகப் பளபளக்கிறது.

கீழே அவளுடைய கால்களைப் பார்க்கிறாள்.

வெள்ளிக் கொலுசுகள் பாதங்களைத் தழுவிக் கொண்டிருக்கின்றன.

நிமிர்ந்து அவளுடைய தோற்றத்தைக் கண்களால் அளவெடுத்துக் கொண்டு மனம் பொருமினாள். பெருமூச்சு விட்டாள்.

இவளுடைய உடம்பை அம்பரீஷ் என்ற அந்த அயோக்கியன் குறிவைத்து விட்டானே!

“அக்கா... நான் பிரசன்னா குட்டியோட வீடு வரைக் கும் போயிட்டு வர்றேன்... நோட்ஸ் வாங்கணும்...”

பிரசன்னா குட்டி என்ற மலையாள மாது அவளு டைய சிநேகிதி - விதவிதமான பாவடை ரவிச்கை யில் அடிக்கடி இங்கு வந்து போவாள்.

“சீக்கிரமாக வந்துடு...” அவள் பற்கள் தெரியும்படி யாக உதடுகளைப் பிரித்துச் சிரித்தாள்.

“சரி அக்கா...” என்ற யாழ் மீட்டும் குரலுடன் போனாள்

இவள் பார்க்கிறாள்

பின்பக்கங்கள் அசைய யாரையும் அசத்துகிற உடம்போடு கதவுக்கு வெளியே போயி கொண்டி ருக்கிறாள்.

அவள் திரும்பிச் சென்று காரிடாரில் மறைந்ததும் இவள் வேதனையுடன் பெரு மூச்சு விட்டாள். ஒரே தங்கையையும் இழந்து விட கூடாது. அவளைப் பாதுகாக்க வேண்டுமானால், அம்பரீஷ் அழிந்தே தான் ஆகவேண்டும் வேறு வழியே இல்லை.

மனம் இறுகி ரத்த ஓட்டத்தில் கொலைவெறி புரண் டது.

# 4

இரவு உற்பத்தியாகி இரண்டு மணி தேதி மூப்ப டைந்திருந்தது. நிலவுக்கு அன்று பூரண வேலை நாள் என்பதால் வானத்தில் பிரகாசமாக ஒளி விட்டுக் கொண்டிருந்தது. மேகங்கள் சுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்ததால் வானம் நிர்வாணமாகி ஏராளமான நட்சத்திர பூக்கள் முளைத்திருந்தன.

கேரளாவுக்கே உரித்தான இரவுநேரக் குளி ஓடிக் கொண்டிருக்க காமினி பயன்படுத்தும் ரத்த நிற மாருதிக்கார் மலைச்சாலையின் குறுகலான பாதையில் மேடேறிக் கொண்டிருந்தது.

மனமே தயங்காதே! அம்பரீஷ் என்ற அந்த அயோக்கியன் மீது இரக்கம் காட்டாமல் கொன்று விடு.

பெரிய பெரிய மலைகள் தூரத்தில் நிழலாய் தெரிய- சின்னச் சின்ன குன்றுகள் ஆங்காங்கே நகர மறுத்து பிடிவாதமாக உட்கார்ந்திருந்தன. சாலை யின் இருபக்கங்களிலும் அடர்த்தியான மரங்கள் - தாவர வர்க்கங்கள்.

காமினி காரை ஓட்டிவந்து தன்னந் தனியாக உட் கார்ந்திருந்த வீட்டின் முன்னால், கொண்டுவந்து ஊமையாக்கினாள்.

இறங்கினாள். திரும்பிப் பார்த்தாள்.

கொச்சி நகர மின்விளக்குகள் வெகு தூரத்தில் நீண்ட இடைவெளியில் சின்னச் சின்னப் பொட்டு களாகத் தெரிந்தன. மலைச்சாலையில் விளக்கு கள் சொற்பமாகியிருந்தன.

காமினி இந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து சிலமணி நேரங்களை தனிமையில் போக்கி விட்டு மனச் சுமை இறங்கிய தெளிவுடன் திரும்பிச் செல்வாள், சில இரவுகளையும் தன்னந்தனியாக இங்கே சந் திப்பாள்.

இவளுக்கு பயம் எதுவும் தெரியாது. மனித மிருகங் களுக்கே அஞ்சாத இவளுக்கு காட்டு மிருகங்கள் சாதாரணம்.

இவள் பூட்டை விடுவித்து கதவைத் திறந்து முதல் வேலையாக தூங்கிக்கொண்டிருந்த விளக்குக ளைத் தட்டி எழுப்பினாள். பரவியிருந்த வெளிச்சத் தில் பார்த்தாள்.

மதியம் இங்கே வேலையாட்களை அனுப்பி சுத்தம் செய்திருந்ததால் சுத்தமாக இருந்தது.

முன் ஹாலினுள் சிந்தனையாய் நடை போட்டு விட்டு வெளியே வந்து நின்று சுற்றிலும் பார்வையை ஓட விட்டாள்.

இரவுப்பூச்சிகளின் தாளம் தப்பாத ரீங்காரம் -

இவற்றுடன் வீட்டின் பின் பக்கத்தில் சரேலென்று ஓடிக் கொண்டிருக்கும்

அகல பாதாள ஆற்றின் சப்தம், நீர்ச் சுழிப்பின் சில சலப்பு...

காமினி யோசனையால் மூக்கின் நுனியைத் தட விக்கொண்டு நின்றிருந்தபோது தூரத்தில் தெரி யும் சிறு வெளிச்சக் கண்களைக் கவனித்தாள்.

உடம்புக்குள் குபீரென்று உஷ்ணக் காற்று அடித் தது.

அவன் - அந்தக் கயவன் வந்துகொண்டிருக்கிறான். நெஞ்சம் பூராவும் மூர்க்கமான ஆசைகளுடன் வந் துகொண்டிருக்கிறான் - இங்கே வந்து காரை நிறுத் திவிட்டு இறங்கியதும் சுரபியைத் தான் தேடுவான்.

அவனை எப்படிச் சமாளிப்பது?

இவள் ஏற்கனவே முன் ஜாக்கிரதையாக சிரிஞ்சி யினுள் அந்த நூதன திரவக் கலவையை நிரப்பி இடுப்புச் சேலையில் மறைத்திருக்கிறாள் - ஊசி முனை அவனுடைய சருமத்தைத் தொட்டுவிட்டு ஒரு துளி திரவம் உள்ளே சென்றால் போதும், மன் மதக் கணை தொடுத்துக் கொண்டு வரும் அவன் செயலிழந்து விடுவான்.

அவனால் இங்கே நடைபெறும் காட்சிகளைப் பார்க்க முடியும்

சந்தோஷங்களையோ... ஆபத்துக்களையோ உணரமுடியும், ஆனால் எதையும் செயல் வடிவில் சந்திக்க முடியாது.

வெளிச்சங்கள் இங்கே தான் வந்து கொண்டிருக் கின்றன, மாருதிக் காரின் எஞ்சின் சப்தம் யூனிஃ பாரமாக ஒலிக்க-

அடுத்த நிமிடம் -

அந்தக் கிரீம் நிற மாருதி ஓட்டப்பந்தய வீரன் போல் ஓடிவந்து அவளுடைய காரில் பின்னால் தொடுவ தைப்போல் நின்றது.

காத்துக்கொண்டிருந்த காமினி உதடுகளில் பஞ் சமில்லாத புன்சிரிப்பை வழங்கிக் கொண்டே ஓடி வந்து முன் கதவைத் திறந்து கொண்டு நின்றாள்

அவன் பார்த்தான்

"சுரபி வரலியா?"

ஆவலான துடிப்புடன் அவன் கேட்ட இந்த கேள்வி இவளடைய இருதயப் பறவையைக் குத்தியபோ திலும் மயக்கமான ஒரு பார்வையைத் தந்தாள். சொன்னாள்.

"அதற்குள் என்ன அவசரம் அங்கிள் ஆற்றுவெள் ளத்தை தவளை கொண்டு போய்விடாது... உள் ளார இருக்கிறாள்... வாங்க"

அவன் முகம் பிரகாசித்தான்.

சுரபி வீட்டினுள் இருந்தாலேயே போதும், சந்தோ ஷங்கள் பூராவும் அங்கேயே நிலைகொண்டிருப்ப தாகத்தான் அர்த்தம்.

"சுரபி ரொம்ப நேரமாகக் காத்துக் கொண்டிருக்கி றாளா?"

"இப்ப... இப்போதுதான் வந்தாள்." சொன்ன காமினி லஜ்ஜை மறந்து அவனுடைய கையைப் பிடித்து அழைத்து வந்து ஹாலினுள் நீளமாகப் போடப்பட்டிருந்த ஷோபாவில் அமர்த்தி பக்கத்தி லேயே ஒட்டி அமர்ந்தாள்.

அவனுக்கு இவளைப் பிடிக்கவில்லை. முகம் சுழித்தான். இந்த நேரத்தில் சுரபியல்லவா பக்கத் தில் உட்கார்ந்திருக்கவேண்டும்.

அவன் சந்தன நிற பட்டு வேட்டி உடுத்தி மேலே அதே மாதிரியான காலர் இல்லாத ஜிப்பா அணிந் திருந்தான். மார்பில் நீளமான பொன் சங்கிலி புரண்டது.

"சுரபியைக் கூப்பிடு... நான் நான் சீக்கிரமாக ஹோட்டலுக்குப் போகணும்."

"அதற்குள் என்னங்க அவசரம் உங்கள் பழைய சிநேகிதி ஒருத்தி பக்கத்திலேயே இருப்பதை மறந் துவிட்டீர்களா?"

சொல்லிக்கொண்டே இவள் மிகவும் சுதந்திர மாக நெருங்கி உட்கார்ந்து கொண்டு தோளின்மீது கையைத் தூக்கிப் போட்டாள். வழக்கத்தை விட வும் அதிகமான மின்சாரத்தை கண்கள் விநியோ கித்தன.

அவனுக்கு வெறுப்பாக இருந்தது-

“சுரபியைக் கூப்பிடும்மா...”

சொன்னபோது ஏராளமான மது நெடி வந்தது. நிறையவே குடித்துவிட்டு வந்திருக்கிறான்.

“அங்கிள்... அவளை நான் கூப்பிடுவதற்கு முன் னால் என்னுடைய சந்தேகங்களுக்கு நீங்கள் விளக்கம் தரணும்”

“என்ன விளக்கம்? அதற்கு இது தான் நேரமா?” அவன் முகம் சுளித்தான்.

“ம்... என்ன அங்கிள்.... அதுக்குள்ளார கோபம்... இங்கே நீங்க வரப்போறது யாருக்காவது தெரி யுமா?”

“தெரியாது... ஐம் நாட் ஏ ஃபூல்”

“தட்ஸ் குட் அங்கிள்... உங்கள் பார்ட்னர் சீமான் குருமூர்த்திக்காவது தெரியுமா?”

“இல்லை “

“உங்களோட மகன்... சபேஷ்...”

“தெரியாது... யாருக்கும் சொல்ல வேண்டிய அவ சியம் இல்லை. இது முழுக்கவும் என்னுடைய சொந்த விஷயம்.”

“நீங்க அதிபுத்திசாலி அங்கிள்... இன்னொரு முக்கி யமான விஷயம் அங்கிள்... ஒரு பெண் உங்களிடம் சிக்கி அவள் முடியாதுன்னு பிடிவாதம் பிடித்தால் நீங்க என்ன செய்வீங்க அங்கிள்.”

“பலாத்காரம் பண்ணுவேன்?”

“அவள் முரண்டு பிடிச்சு தகராறு செய்து ஓட எத்த னித்தால் என்ன செய்வீங்க அங்கிள்”

உதடுகள் மலர்ந்து பல் வரிசை தெரிய இமை களை விரித்துக் கொண்டு புன்னகையாய் இவள் கேட்டாள்.

நெஞ்சுக்குள் சிசிலித் தீவு எரிமலை உறுமியது.

"என்ன செய்வேனா? உனக்கும் தான் அந்த அனு பவம் உண்டே...! செயலிழக்கச் செய்யும் மெடி சினை இஞ்சக்ட் பண்ணிடுவேன்."

"இஞ்சக்ட் பண்ணிவிட்டு அந்த அப்பாவிப் பெண்ணை நாசமாக்குவீங்க இல்லையா?"

அவள் கேட்ட தோரணையும் சிரிப்பும் வித்தி யாசமானதாக இருக்கவே பக்கத்திலேயே ஒட்டிக் கொண்டிருக்கும் இவளை ஏறிட்டான்.

மூச்சு கழுத்தோரம் நெருடியது.

அதில் உஷ்ணம்

"என்ன அங்கிள் அப்படிப் பார்க்கிறீங்க நான் புதியவள் இல்லை...பாடுவதையும் ஆடுவதையும் தொழிலாகக் கொண்ட ஸிங்கர்? கம் டான்ஸர். பெயர் ஞாபகம் இருக்கிறதா... மிஸ் காமினி... காமினி"

சொன்னவள் நிறுத்தி தன் புடவை மறைவு இடுப் பில் கை வைத்தாள்.

"காமினி அப்படியென்றால் அதன் அர்த்தம் என்ன?"

அம்பரீஷ் யோசித்துக் கொண்டிருந்த போதே இவள் மேலும் புன்னகைத்து –

"டியர் அங்கிள்... என்னோட சகோதரியை எதற்கு கொலை செய்தீங்க? அவள் என்ன தப்பு செய்

தாள்?" என்று கேட்டபோது இவளுடைய தேன் குரலில் பிசிறல் ஏற்பட்டுக் கரகரத்தது.

"காமினி... என்ன பேசுரே?"

"இப்போது தமிழ்தான். சில நேரங்களில் நம்முடைய டமில் எழுத்தாளர்களைப் போல் ENGLISH கலந்தும் பேசுவேன்.

இவள் பேசிய தோரணை அவனுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது.

"ஆர் யூ மேட்?" என்று கத்தினான்

"அவளோட பாடியை என்ன செய்தே? சிக் மங்களூரில் எந்த எடத்தில புதைச்சே?"

"ஏன்... நீயும் அந்த இடத்துக்குப் போக ஆசைப்பட்ரியாடி..."

அவன் கோபமாகச் சொல்லி தன் தோள் மீது மாலை போல் கிடந்தக் கையை உதறித் தள்ளி விட்டு எழுந்திருக்க முயன்றபோது இவள் கூடவே நிழல் போல் உயர்ந்து இடுப்பு மறைவிலிருந்து சிரிஞ்சியை எடுத்து கண் இமைக்கும் நேரத்திற்குள் அவனுடைய தொடையின் மீது சுருக்கென்று இறக்கி விட்டாள்

அம்பரீஷ் நெருப்புக் கோடொன்று அந்த இடத்திலிருந்து தீய்த்துக் கொண்டு மேலேறிச் சென்றது போலிருந்தது. உறைந்து போய் நின்றான்

இப்பொழுது பார்க்க வேண்டுமே காமினியின் கண்களை... புருவங்களை நெறித்து கண்களில் அம்புத்தனம் கொடுத்து உதடுகளில் உள்ளத்து உணர்சிகளைப் பிரயோகித்தாள்.

பார்வையில் ஓர் ஆவேசமும்-உத்வேகமும் இருந்தன-எறி ஈட்டிகள் போல் பாயத் தயாராகின.

அம்பரீஷ் நின்றபடியே பார்த்தான் காலை முன்னால் தூக்கி வைக்க நினைத்து அதைச் செயல் படுத்த முடியாத நிலையில் தத்தளித்தான். அபாயத்தை உணர்ந்து கொண்டதும் முகத்திலுள்ள ரத்தம் முழுவதும் வடிந்து விட்டதைப் போல் வெளுத்து குபீரென்று வியர்த்து விட்டது.

கோபமாக இவளைப் பார்த்தான். கண்களை உருட்டி விழிக்க நினைக்கிறான் நினைப்பதைச் செயல்படுத்த முடியவில்லை.

பயங்கரமான ஆபத்து அவனுக்குப் புரிகிறது. இவள் தந்திரமாக நடித்து தன்னை வஞ்சம் தீர்த்துக் கொள்ள முயலுகிறாள் என்பதும் தெரிகிறது ஆனாலும் இந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்புவது என்ற வழி தெரிய வில்லை.

அவள் கொன்று விடுவாளா? நினைக்க முடிகிறது.

ஓடிவிடு என்று மூளை கட்டளை பிறப்பிக்கிறது.

ரத்தத்தை வாங்கிக் கொண்டு செல்லும் நரம்புகள் ஒத்துழைக்கவில்லை.

அப்படியே நின்று மரணப் பீதியுடன் பார்த்துக் கொண்டு பிறகு குபீரென்று சரிந்து மடங்கி விழுந்தான்.

அவன் உணர்ச்சியற்ற மரக்கட்டைபோல். மனித பிண்டம் போல் கை கால்களை அசைக்க முடியாமல் கிடந்து வெறித்து விழித்த நிலையில் இவளையே பார்த்துக் கொண்டிருந்தான்

ஆபத்தை உணர முடிகிறது - ஆனால் நரம்பு மண் டலத்தை இயக்கி செயலாக்கம் தர முடியவில்லை,

காமினி சிரிஞ்சி ஊசியைக் கழற்றி எடுத்து அதற் குரிய சின்ன அட்டைப் பெட்டியினுள் மூடி வைத்து இடுப்புச் சேலையில் மறைத்து விட்டுப் பார்த்தாள்.

சொன்னாள்.

“ப்ளடி ராஸ்கல்... இப்போது சொல்லடா... என் னோடு தங்கை சுரபியா உனக்கு வேணும்...! அதற்கு முன்னால் என்னுடைய இன்னோரு சகோ தரி நிருபமாவை அனுப்பி வைத்திருப்பதாகச் சொன்னியே... அந்த இடத்திற்கு உன்னையும் பார் சல் செய்கிறேன்...”

உள் அறையினுள் சென்று கத்தியை எடுத்துக் கொண்டு வந்து விரித்தாள்-குனிந்து அவன் முகத் திற்கு நேராகக் கொண்டு போனாள். இருதயத்திலி ருந்து இரக்கம் சிறகு முளைத்து எங்கேயோ பறந்து போயிருந்தது.

“இப்போது உன்னைக் கொல்லப் போகிறேன். உன்னுடைய ரத்தத்தை இந்தக் கத்தி தொட்டுப் பார்க்கப் போகிறது. ரத்தம் பூசி ரத்த அழைப்பி தழ் கொடுத்தேனே அதிலிருந்தே என்னுடைய பழி வாங்கும் எண்ணத்தைப் புரிந்து கொள்ள முடிய லியா... முண்டம்...”

காதுகளால் இவள் சொன்ன வார்த்தைகளை வாங்கிக் கொள்ள முடிந்தது காத்துக் கொண்டி ருக்கும் மரணத்தைக் கண்களில் பார்க்க முடிந்தது.

ஆனால் தப்பித்துக் கொள்ளும் வழிதான் தெரிய வில்லை உடம்பிலுள்ள எந்த உறுப்புகளுமே ஒத்

துழைக்காததால் அவன் மரணப் பீதியுடன் குலை நடுங்கிச் செத்துக் கொண்டிருந்தான்.

“மரண வினாடிகளை எண்ணிக் கொண்டிரு... உன்னை ஒரேயடியாகக் கொன்று விடக் கூடாது. உன்னைச் சித்ரவதை செய்து தான் மரணத்தைச் சந்திக்க வைப்பேன்.”

சொல்லிக் கொண்டே, இவள் கத்தியை மூக்கின் மீது சரக்கென்று இக்கிவிட அங்கிருந்து ரத்தம் பீறிட்டு அடித்தது.

அவன் மேலும் வியர்த்து விகாரமடைந்த முகத் தோடு நெளிந்தான். கண்கள் முட்டைகளாகப் பிதுங்கி கொண்டு வர- ரத்தம் கிளைகளாகப் பிரிந்து வழிய சிவப்பு நிறம் மினுமினுக்கும் கோர முகமாய்த் தெரிந்தான்.

அக்கா உயிரோடு இருக்கிறாளா இல்லையோ என்பது திட்டவட்டமாக இவளுக்குத் தெரியாது

அவள் இறந்து அதற்குக் காரணமானவன் இவன் தான் என்பது தெரிந்தால் உடம்பு பூராவும் கொத் துக் கறிபோல் கொத்தி எடுத்திருப்பாள்.

ஆனாலும் இவன் உயிர் வாழ்ந்தால் நிச்சயமாக தங்கை சுரபியின் கற்புக்குச் சேதம் விளைவிப் பான். அவளுக்கு மட்டுமல்ல... இன்னும் பல பெண் களுக்கு...!

அதனால்தான் இவனைத் தீர்த்துக்கட்டுவது என்ற பயங்கரமான- இரக்கமேயற்ற முடிவுக்கு வந்தாள்.

அவன் சுலபத்தில் மயக்கத்திற்குப் போய் விடவே இவள் இரண்டு கால்களையும் அள்ளிப் பிடித்

துக் கொண்டு தரதரவென்று வெளியே இழுத்துச் சென்றாள்.

வீட்டுக் காம்பவுண்டைத் தாண்டி- ஒற்றையடிப் பாதையைக் கடந்து ஆற்றங்கரையின் விளிம்புக்கு நகர்த்தினாள்.

பார்த்தாள்.

நிலவு பிரசாசமாக ஒளிர்ந்துகொண்டிருக்க குன்று களும் மரங்களும் சாயலாகத் தெரிந்தன. ராக்கா லப் பூச்சிகளின் ராக ஆலாபனை

மலை வெளவால் ஒன்று தோல் இறகை விரித் துக் கொண்டு தாழ்வாகப் பறந்துச் செல்ல விசுக் கென்று முகத்தில் காற்றடித்தது

மரத்தின் உச்சாணிக் கிளையில் ஆந்தை - ஒன்று அமர்ந்து கொண்டு மரணச் சங்கு ஊதியது.

காமினி ஓர் உத்வேசம் பொங்க அவனுடைய உடலை எட்டி மிதித்து உருட்டி ஆற்றில் தள்ளிய தும், சடசடவென்ற சப்தம் தண்ணீர் சிதறும் 'தொப்' என்ற ஓசை இனி அவன் உயிருடன் திரும்ப முடி யாது ஒடும் ஆற்றுத் தண்ணீர் இழுத்துச் சென்று உடலை கடலோடு கலக்கச் செய்து விடும்.

இப்படி இவள் நினைத்துக் கொண்டே ஒரு திருப்தி யுடன் திரும்பிய போது –

எதிரில் நின்று வெள்ளையாக பற்களைக் காட்டும் நிழல் மனித உருவம் தெரிந்தது.

காமினி இருதயம் எகிறி துடிக்க அதிர்ந்து போனாள்.

# 5

“நான் தான் காமினியம்மா... என்னைத் தெரிய லியா...?”

அவன் சொல்ல இவளுக்கு குரலை வைத்தும்- தோற்றத்தின் சாயலை வைத்தும் அடையாளம் தெரிந்தது.

வாட்ட சாட்டமான உடம்புக்குச் சொந்தக் கார னான அவனுடைய பெயர் மதன்... அம்பரீஷ் ஹோட்டல் ரிஸார்ட்டில் வெள்ளுடுப்பில் பெயரரா கப் பணிபுரிகிறான்.

யாரிடம் எதுவும் பேசமாட்டான். தான் உண்டு... தன்னுடைய வேலை உண்டு என்று எப்பொழுதும் ஒதுங்கியே இருப்பான். தன்னிடம் மட்டும் எப்பொ ழுதாவது பேசுவான்.

“மதன்...மா... என்னைத் தெரியல...”

தெரிகிறது.... அவனை இன்னாரென்று அடையா ளம் தெரிந்து விட்டது. ஹோட்டல் பெயரர்!

காமினிக்கு முகம் வியர்த்தது. ஹோட்டலின் எம்.டி யைக் குற்றுயிராக்கி இழுத்து வந்து உருட்டி விட் டதை நேருக்கு நேராகப் பார்த்து விட்டிருக்கிறான்.

இந்தக் காட்சியை நேராக ஏதாவது ஒரு போலீஸ் நிலையத்திற்குச் சென்று தெரியப்படுத்தி விட்டால் நடப்பதே வேறு-

பில்லியாடி மகளே... ஆளை நசுப்பிச்சோ என்று கத்தி உடம்பில் இன்ன இடம் என்று பாராமல் அடித்து நொறுக்கி விடுவார்கள்.

போலீஸ் அடி, உதைகள் எப்படி இருக்கும், என்று நான் சொல்ல வேண்டியதில்லை.

“நீ... நீயா... மதன் நீயா...?”

இவள் நாக்குத் தடுமாறினாள் நரம்புகள் வளைந்து கொடுக்க மறுத்து காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கம் நடத்த ஆரம்பித்தன.

போலீஸுக்குச் சென்று இப்பொது நடந்திருப்ப தைச் சொல்லுவதில் தடை எதுவும் இல்லை... ஆனால் தங்கை சுரபி சின்ன சிறு புஷ்பம்... அந்தப் புஷ்பம் மணத்து இருக்கும் போதே உரியவன் ஒரு வனிடம் ஒப்படைக்க பட வேண்டும்.

சுரபிக்கு இவள் தான் தாய் தந்தை உறவு ஜனம் எல்லாம். அவள் மகிழ்ச்சியுடன் வாழ இவள் வாழ்ந்தாக வேண்டும்.

“நான் தானம்மா... நீங்க முதலாளியை பரவென்று இழுத்துக் கொண்டு வந்ததை பார்த்தேன். நீங் களா இப்படிச் செய்றீங்ககிறதை என்னால நம்பவே முடியலை. அவ்வளவு உயரமான இடத்திலிருந்து பாதாளத்தில் ஓடும் ஆற்றில் தள்ளி விட்டிருக்கி றீங்க எனக்கு இன்னும் ஆச்சரியமாகவே இருக்கு”

காமினி இனியும் அங்கே நின்று கொண்டிருக்க வேண்டாம் என்ற எண்ணத்துடன் நடக்க ஆரம் பித்ததும் அவனும் சங்கிலி தொடர் போல் வந்தான்.

இவன் காட்டிக் கொடுத்து விடுவானா...?

மதன் எப்படிப்பட்டவன் என்று அவளுக்குத் தெரியாது. ஒரு வேளைச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு பிளாக் மெயில் செய்தும் பணம் பறிக்க முயற்சி செய்யலாம்.

சில மனிதர்கள் எப்படி வேண்டுமானாலும் பிழைப்பு நடத்தலாம். கேவலமான பிறவிகள்.

“மதன்... உன்னை என்னால் புரிஞ்சுக்க முடியல்ல... நீ எதற்காக இங்கே வந்தேன்னு தெரியல...”

“சொல்றேன். முதலில் வீட்டுக்கு போகலாம்.”

போனார்கள்.

வீட்டினுள் சென்றதும் இன்னும் பொழிந்து கொண்டிருந்த அந்த மின் விளக்கின் வெளிச்சத்தில் மதனை இவள் பார்த்தாள்.

பச்சைக்கரை வேட்டியில் நின்று கருப்புக் கட்டங்கள் போடப்பட்ட முழுக்கை சந்தன நிற முழுக்கைச் சட்டை அணிந்திருந்தான்.

அவனா... ஹோட்டலில் வெள்ளுடுப்பில் தலைக் குல்லாயுடன் பார்த்த அந்த மதனா இவன்? - நம்ப முடியவில்லை.

ஒரு ஹோட்டலில் வேலை செய்யும் பெயரர் இவன் என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

கச்சிதமான கமல் மீசை மேலுதட்டில் எட்டிக் கொண்டிருக்க- விஜயகாந்தின் கம்பீரத்தில் தெரிந்தான். மா நிற உடம்பு. துடிப்பானவன் என்பதை இவனுடைய ஒவ்வோர் அசைவுகளுமே விளக்க ஓலை வாசிக்கின்றன்.

“காமினியம்மா... என்னைக் கண்டு நீங்கள் மிர ளவேண்டிய அவசியம் இல்லை. இங்கே நடந்த எதையும் நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்... கொடூரமான ஒருவனைத்தான் நீங்கள் தண்டிச்சி ருக்கிறீங்க...”

மதன் சொல்ல –

அவனை நம்ப முடியாத கண்களுடன் பார்த் துக் கொண்டிருந்தாள். மரியாதை கலந்து இன் னும் அடக்கம் பிசகாமல் நின்று கொண்டிருக்கும் இவனை நம்பலாமா?

நம்பக்கூடாது என்றும் சொல்ல முடியாது.

நம்பித்தான் ஆகவேண்டும்.

“காமினியம்மா... நிச்சயமாக அவன் செத்துடு வானா?”

குரல் தடுமாறியது-கரகரத்தது.

“சந்தேகமா இருக்கிறதா மதன்? இங்கிருக்கும் போதே அவனுடைய மூக்கை மூளியாக்யிருக்கி றேன்... ரத்தம் ஒழுகும் மூக்கோடுதான் சொறி நாயைப் போல் இழுத்துக் கொண்டு போய்த் தள்ளி னேன். கிடு கிடு பள்ளத்தில் ஒழுங்கான இடத்தில் அந்த ஆறு ஓடிக் கொன்டிருக்கிறது. கரடுமுரடான கரையின் சரிவுகளில் மோதி தண்ணீரில் விழுந்த போது அநேகமாகச் செத்துப் போயிருப்பான்.”

இவள் உறுதியாகச் சொன்னாள்- குரலில் தளர்வு என்பது கொஞ்சம்கூட இல்லை. இன்னும் அதே ஆவேசம்-ஆத்திரம்-

ஷோபாவில் உட்கார்ந்தாள்.

அவனையும் உட்காரும்படி எதிர் ஷோபாவைக் காட்டினாள்.

தயங்கி, விழித்து -

மீண்டும் இவள் வற்புறுத்தியதால் தயக்கமாக உட் கார்ந்தான். கண்களால் ஏறிட்டான்.

காமினி செம்பொன் உடம்போடு இருந்த போதி லும் முகத்தின் அழகு பதட்டத்தின் காரண மாக தனிப்பொலிவுடன் தெரிந்தது. கவலையின் ரேகைகளும் இவளுக்கு தனியழகையே தந்தன.

அம்பரீஷ்... சீமான் குருமூர்த்தி போன்றவர்கள் இவ ளுடைய அழகில் மயங்கிக் கிடப்பதில் வியப்பொன் றும் இல்லை.

“நீ எப்படி இங்கே வந்தே மதன்?”

அவன் யோசித்து -

“நா... நான் ஒரு உண்மையைச் சொன்னால் தான் நிலைமையைப் புரியவைக்க முடியும். உங் கமேல அனுதாபமோ... அக்கறையோ எனக்குத் தெரியாது... உங்களுக்கு உதவியாக இருக்கணும் என்கிற எண்ணம் எப்போதுமே எனக்கு உண்டு. இன்று காலைல நீங்க முதலாளி அம்பரீஷ்கிட்டே பேசினீங்க... நானும் கவனிச்சேன்... நீங்க ரெண்டு பேர்களும் கேனன் காட்டேஜ் அப்படின்னு சொன் னது என்னோட காதுகளில் விழுந்தது. கேனன் காட்டேஜில சந்திக்கப் போறீங்கன்னு தெரிஞ்சுக் கிட்டேன்”

காமினி பார்த்தாள்

“தெரிஞ்சு... இங்கே வரணும் என்கிற எண்ணம் உனக்கு எதனால் வந்தது? வேவு பார்க்கிறியா?”

“சுத்தமாக எனக்கு அந்த எண்ணம் எதுவும் இல்லை. நீங்க ஹோட்டலுக்கு வந்து ஆடுரதை யும்... பாடுரதையும் பார்க்கிறேன்... நீங்க படர கஷ் டங்களைப் பார்க்கும்போது என்னையும் அறியா மல் கண்ணீர் ததும்பி வழியும்...பாசம்னு வேணும் னாலும் அதைச் சொல்லலாம்.... உங்களை யாரா வது தொட்டுப் பிடித்துக் கொண்டு ஆடினால் என் நெஞ்சம் பதை பதைக்கும். தொட்டாலேயே நெஞ் சம் பதைக்கும்னால் தப்பாக நடந்து கொண்டால் என் மனம் என்ன பாடுபடும் எங்கிரதை நீங்களே புரிஞ்சுக்கலாம்.”

அவன் குரல் அடக்கத்துடன் உணர்ச்சி மயமாய்ப் பிரதிபலித்து ஆழம் செறிந்த ஓர் அன்பை எதிரொ லித்தது.

எதையாவது எசகு பிசகாய்ச் சொல்லிவிட்டால் கண்களைக் கசக்கிக் கொண்டு 'ஓ' வென்று அழுது விடுவான்.

காமினி ஒரு கணம் ஸ்தம்பித்து அவனையே பார்த் துக்கொண்டிருந்தாள். பிறகு கேட்டாள்.

“நான் இங்கே தப்பு செய்வேன்னு எதிர் பார்த்து வந் தியா மதன்”

“ம்...”

“நீ எதிர்பார்த்தது தப்பில்லை... நான் நரம்புகள் சேதமடைந்த வீணைதான் என்பதை பகிரங்கமாக ஒப்புக் கொள்வதில் வெட்கபடவில்லை... இளை ஞனே... உன்னிடம் சொல்ல என்ன தயக்கம்? என் உடம்பின் தாகத்தைச் தணித்துக் கொள்ள ஆட வர்களின் தீண்டுதலுக்கு இடம் கொடுத்தேனா? இல்லை... நிச்சயமாக இல்லை. நான் அந்த மாதி

ரியான நிம்போ மோனியாக் அல்ல... பின்னே ஏன் இப்படி நடந்து கொள்ரேன்னு கேட்பே... மதன்... என்னைப்போல பல சகோதரிகள் தங்கள் உடலைக் கறைப்படுத்திக் கொள்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம்... இந்தச் சமுதாயத்தின் அமைப்பு அப்படி...”

சொன்ன காமினி புறங்கையால் கண்களைத் துடைத்து விட்டு நிமிர்ந்தாள். முகத்தில் மாற்றம் கொடுத்துப் பார்த்தாள்.

“போகட்டும் மதன்... ஆண்களின் முன் அடங்கும் இனமாகத்தான் பெண்ணினம் இன்னும் அடிமைப் படுத்தப்பட்டுக் கிடக்கிறது... முதலில் சமுதாயம் நல்லவிதமாக வழிகாட்டி வாழ வழிதெரியாமல் தவிக்கும் பெண்களுக்கு நல்வழி காட்ட வேண்டும்... இதையெல்லாம் உன்னிடம் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறேன்... ம்... மதன்... இங்கே நடந்ததை யாரிடமாவது சொல்லிவிடுவாயா”

“இல்லை. சொல்ல மாட்டேன்”

“உன்னை நிச்சயமாக நம்புகிறேன் மதன்.. ம்... உனக்கு கார் ஓட்டத் தெரியும் அல்லவா?”

“தெரியும்...”

“நான் சொல்றதைக் கவனி... நீயே அம்பரீஷின் காரை ஓட்டிக் கொண்டு போய்ஹோட்டல் கார் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு போய்விடு... இந்நேரம் அங்கே ஏராளமான கார்கள் நிறுத்தப்பட்டிருக்கும்.”

அவன் சம்மதித்தான்.

“கவனம் மதன்.. காரில் போவதும்... நிறுத்துவதும் கவனம்... எல்லாவற்றையுமே ரகசியமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.”

“சரி...”

அவன் எழுந்தான்.

வெப்பமாய்க் குமுறிக் கொண்டிருந்த இவளுடைய நெஞ்சம் குளிர ஆரம்பித்தது. அவனை வெளியே அனுப்பி விட்டு ரத்தம் சிதறி உறைந்து கிடந்ததை தண்ணீர் கொண்டு கழுவிச் சுத்தம் செய்யலானாள்.

# 6

கொச்சின் நகரில் வசதி படைத்த நம்பூதிரிகளும்- நாயகர்களும்- ஈழவர்களும் வாழும் மணிகண்டன் நகர் அங்கேயுள்ள சின்ன பங்களா ஒன்றில் காமினி தன் தங்கை சுரபியுடன் வசித்து வந்தாள். அச்சம்மா என்ற தூரத்து உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி வீட்டோடு இருந்து தேவைகளைக் கவனித்துக் கொள்கிறாள்.

இவள் வீட்டுக்கு வந்தபோது நள்ளிரவு ஒரு மணிக்கு மேலாகியிருந்தது ஒரு பயங்கரமான கொலையைச் செய்திருந்த போதிலும் இனி அவனால் ஆபத்தில்லை என்ற நிம்மதியுடன் தெரிந்தாள்.

கதவைத் திறந்து உள்ளே அழைத்து வந்த அச்சம்மா ஐம்பது வயதைப் பூர்த்தி செய்து விட்டாள். மெலிந்த உடம்புல தலைமுடிகள் எல்லா வெள்

ளையடிக்கப் பட்டது போல், வெளுத்து போயிருந்தன.

கணவன் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்து இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. அதனால் உடம்பைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அறுபது வயது முதுமை, தோலில் சுருக்கங்களில் தெரிந்தது.

இப்பொழுது அவளுக்குத் துணை குருவாயுரப்பனும் ஐயப்பனும் - கோட்டாணிக்கல் - அம்மனும் தான்!

ஒரு நல்ல தாய்க்குரிய அன்பு காட்டி அச்சம்மா, “மோளே... இன்று ராத்திரி தான் உனக்கு புரோகிராம் இல்லையே... ஏன் தாமதம்” என்று கேட்டாள்.

கேனன் காட்டேஜிக்குச் சென்று அம்பரீன மூக்கை அறுத்துச் சித்ரவதை செய்து ஆற்றோடு அனுப்பியதை எப்படிச் சொல்ல முடியும்?

“ஒரு சிநேகிதியைப் பார்க்கப் போயிருந்தேன். நேரம் போனது தெரியல.. ஆயா...”

சொன்னவன் உடம்மைப் பிடித்து கொண்டு கசகசத்துப் போயிருந்த உடைகளை உரித்தாள். கத்தரிப் பூ நிற நைட்டியினுள் நுழைந்தாள்.

“ஆயா... நான் ஏழு மணி வரையிலும் உறங்கணும்... அதற்கு முன்னால தூக்கத்தைக் கலைக்காதே...”

ஆயா புடவையை இழுத்துப் போர்த்தி கொண்டு தூக்கம் சொருகும் கண்களுடன் போனதும், இவள் பெட்ரூமினுள் நுழைந்து விளக்கைப் போட்டாள்.

பார்த்தாள்.

நிறம் மங்கிய சாக்லெட் நிற நைட்டியினுள் தங்கை சுரபி மல்லாந்து படுத்திருந்தாள்.

தோளில் பரவி படுக்கையில் தலையணையோடு புரண்டிருக்கும் தலை முடிகளுடனும்- மார்பை விட்டு விலகிக் கிடக்கும் மெல்லிய பொன் சங்கிலி யுடனும் தெரிந்தாள்.

பூரித்து நிற்கும் தென்னங் குரும்பை போன்ற அம்ச மான உடம்பு - கைகள் கால்கள் என்று எந்த உடல் உறுப்புக்களிலும் குறை காண முடியாத அமைப்பு.

இமைகள் பொருந்தி- உதடுகள் பூப்போல் மலர்ந்து அவற்றின் மிருதுத் தன்மையில் ஓர் அசைவு... தூங் கிக் கொண்டே புன்னகைக்கிறாள். கனவு காண வேண்டிய வயதுதான்!

இவள் பெருமூச்சு விட்டாள்

சுரபியை பாதுகாப்புடன் வளர்க்க வேண்டும். கோழிக் குஞ்சின் இளமை கொண்ட இவளை பருந்திடமிருந்து காக்க வேண்டும் என்பதற்காகத் தானே ஒரு பயங்கரமான காரியத்தைச் செய்து விட்டு எதுவுமே தெரியாத பூனை போல் வந்திருக் கிறாள்.

அவனுடைய பார்ட்னர் சீமான் குருமூர்த்தியும் பொல்லாதவன்தான் என்ற போதிலும் அவனைப் போல் கொடூரமான சிந்தனைகள் கொண்டவன் அல்ல...

கதவை வெறுமனே சாத்தி வைத்து விட்டு பாதங் கள் சப்திக்காமல் நடந்து வந்து ட்யூப் விளக்கின் ஒளிக்கு விடை கொடுத்து விட்டு பழுப்பு நிற நைட் லாம்புக்கு உயிர் கொடுத்தாள்.

கட்டிலில் ஓசை எழுப்பாமல் வந்து அவள் அருகிலேயே படுத்துக் கொண்டாள். மனசுக்குள் ஒரு நிம்மதி. சுரபி பயமின்றி அமைதியாக வாழுவாள். அவளைப்பற்றி பிரச்சனைகள் தீர்ந்தன.

ஆனால் இனிமேல்தான் பிரச்னைகள் ஆரம்பமாக இருக்கின்றன என்பது அப்பொழுது அவளுக்குத் தெரியாது.

# 7

கிழக்கு வானம் ரத்த நிறத்தில் கோட்டிங் கொடுத்து சிவந்திருக்க பிடிவாதமாக உட்கார்ந்திருந்த நிலவு மூழ்கத் துவங்கியது.

பறவை இனங்கள் பலவிதமான இரைச்சலை விநியோகிக்க அந்த இளைஞன் சாவதானமாக ஆற்றங்கரையின் மீது நடந்து போய்க் கொண்டிருந்தான்.

கால்களில் செருப்புகள் இல்லை- ஒரு மாதமாக ஷேவிங் காணாத முகம்-உயரமான ஆகிருதி உடம்பு இருந்த போதிலும் அந்த உடம்பைப் பேணிக் காக்கவேண்டும் என்ற எண்ணம் எதுவும் அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

கரு நீல நிற பாண்டு இடுப்பில் அமர்ந்திருக்க அது கிழிந்து சருமம் தெரிந்தது. அதைப் போலவே பனியன் காணாத காப்பிப் பொடி நிற டீ ஷர்ட்டும் சேதமாகியிருந்தது.

குளித்து பல நாட்கள் ஆகியிருக்கலாம்.

அவன் தான் –

அழகான நிருபமாவை எக்கச்சக்கமாகக் காத லித்து அவளை அழைத்துக் கொண்டு போன பொன்ராஜ்

அவன் மனம் நொறுங்கிப் போயிருந்தது. இந்த உலகத்தில் வாழவே அவனுக்குப் பிடிக்கவில்லை. உயிர் மீது ஏற்பட்டிருந்த வெறுப்பு. சாதாரணமா னதல்ல... எதற்காக... யாருக்காக, வாழவேண்டும் என்று தான் அடிக்கடி எண்ணி கொள்வான்.

ஆனால் தற்கொலை செய்து கொண்டு இந்த உல கத்தை விட்டே போய் விடவேண்டும் என்று என் றைக்குமே நினைத்ததில்லை.

இன்னும் அவன் தன் காதலி நிருபமா நினைவா கவே இருந்தான். இந்தச் சூரியோதய நேரத்தில் கூட அவள் இந்தப் பக்கமாக வந்து விடமாட்டாளா என்ற ஏக்கம் இருந்தது.

அவள் வர வேண்டும் - நிருபமா வாழ் நாள் பூராவும் தன்னுடனேயே இணைந்து வாழ வேண் டும் - அவள் இனிக்கும் வாழ்வைத் தரமுடியாமல் போனால் கூட மனைவி என்ற உரிமையுடன் பக் கத்தில் இருந்தாலேயே போதும்.

“நிருபமா... ஓ... நிருபமா... என்னை ஏங்கி ஏங்கி அழ வைத்து விட்டு நீ எங்கே போயிட்டே?”

அவன் வாய்விட்டு புலம்பியவாறு தண்ணீர் தாகம் எடுத்து கரையின் சரிவில் இறங்கினான் கீழே பார்த்தான்

தண்ணீர் அதிக உயரம் இல்லாமல் சல சலப்புடன் ஓடிக் கொண்டிருப்பது தெரிந்தது இறக்கி விட்டி ருக்கும் குத்துச் செடி போன்ற ஒரு மரம்- அந்த மரத்

தின் வேரைப் பிடித்துக் கொண்டு மயங்கிய நிலையில் ஒரு மனிதன்.

பொன்ராஜ் அவனுக்கு உதவ வேண்டும் என்ற இயல்பான எண்ணத்தில் இறங்கி ஓடி குனிந்து அவனுக்குக் கை கொடுத்தான். மிகுந்தச் சிரமத்துடன் அவனைத் தூக்கி எடுத்து தரையில் நீட்டினான்

பார்த்தான் –

மூக்கு அறுபட்ட முகம்.

அவனுக்கு அடையாளம் தெரிந்து விட்டது அம்பரீஷ் ஹோட்டல் ரிஸார்ட்ஸ் என்ற ஹோட்டலின் மானேஜிங் டைரக்டர்!

அவன் இன்னார் என்பதை அடையாளம் தெரிந்துகொண்டதும் பொன்ராஜ் குபீரென கோப வாசலினுள் நுழைந்தான். அவனை அப்படியே ஆற்றில் உருட்டித் தள்ளிவிடலாமா என்ற ஆவேசம்.

"நீ... அம்பரீஷ்... பயங்கரமான பொறுக்கி கோடீஸ்வர பிச்சைக்காரன்... என் நிருபமாவை என்னிடமிருந்தே பிரித்த அயோக்கியன்... உனைக் காப்பாற்றியதே தப்பு... உன்னை இங்யிருந்தே தூக்கிப் போட்ரேன்"

சொல்லிக் கொண்டே நகர்த்த முயன்றபோது அவன் மிகுந்தப் பிரயானசயுடன் கையை அசைத்துவிட்டு "என்னை இப்படியே உருட்டித் தள்ளிவிடு. இனி எப்படியும் நான், உயிர்..." என்று சொன்னவன் வெறித்தான்.

கண்கள் இயங்க மறுத்து அப்படியே நின்றன.

அவன் செத்துப் போய் விட்டான்

ஏற்கனவே அவன் மரணக்கட்டத்தில் இருந்தான். அவனைக் காப்பாற்றுவது என்பது எளிதான காரி யம் அல்ல.

அவன் தலைமுடிகளினுள் விரல்களை கொடுத் துத் தேய்த்துக் கொண்டிருந்த போது இரு மனித நிழல்கள் நீண்டு கொண்டே வந்து உயர்ந்து நின்றன. பொன்ராஜ் உட்கார்ந்தபடியே தலையை உயர்த்திப் பார்த்தான்.

இரண்டு போலீஸ்காரர்கள் யூனிபார்ம் உடையி லும் கேரளா போலீஸாருக்குரிய தொப்பியுடனும், கையில் குண்டாந்தடியுடனும் கோபமாகத் தெரிந் தார்கள்

“கொலை... கொலை... ஓரோ ஆலை இவன் கொன்னு களஞ்சு... ஆயான், மரிச்சுப் போயி... எடா.... பொல்லியா மகனே... ஆளைக் கொன்னு வெள்ளத்தில் முக்கி எடுத்து களி காணுன்னோ...”

கான்ஸ்டேபிள் கோபமுகத்துடன் சொல்ல பொன் ராஜ் அதிர்வாய்ப் பார்த்தான்

இரண்டு பேர்களுமே கொலைகாரனாகப் பார்க்கி றார்களே....

உடனே அவன் மறுத்து நடந்ததை சொன்னான்.

இன்னொரு போலீஸ்காரருக்குக் கோபம் வந்து விட்டது..

“எடா... தள்ளையின்றே மகனே... கள்ளமா பறை யின்னு... சவுட்டிக் களையும் பல்லு முப்பத்தி ரெண் டையும் பொட்டிக்கும்”

அவன் குழப்பமாய் எழுந்து நிற்க- போலீஸ் சூழ்ந்து கொண்டார்கள். ஒருவர் பின் கழுத்தோரம் கையை

கொடுத்து சட்டையைப் பிடித்துக் கொள்ள இன்னொருவர் இடுப்பை இறுக்கினார்.

“கள்ளச்சாராயம் காய்ச்சுறவங்களைப் பிடிக்க வந்தோம்... கொலைகாரன் கிடைச்சான்.”

பொன்ராஜ் தன் நிலையை எப்படி உணர்த்துவது என்று தோன்றாமல் தவித்து விழித்துக் கொண்டிருந்தான்.

உண்மையை எடுத்துச் சொல்ல முயன்ற பொன்ராஜை அதட்டல் மூலம் அடக்கி விட்டார்கள் போலீஸ்காரர்கள்.

கொலை செய்ததாக அவன் மீது நேரடியாகக் குற்றம் சாட்டினார்கள்.

பொன்ராஜ் ஏற்கனவே மனம் நொந்துப் போயிருந்ததால் தன்னை நிரபராதியாக்கி வாதாடவில்லை. எதற்காக வாதாடி உயிர் வாழ வேண்டும் என்றே எண்ணினான்.

# 8

டெலிபோன் மணியடிக்கும் சப்தம் மூளை நரம்புகளில் தட்டி உறக்கத்தை ஒட்டியது. காமினி கைகால்களை நீட்டி விரித்து எழுந்து உட்கார்ந்தாள். உடம்பையும் அப்படியும் இப்படியுமாக வளைத்துச் சோம்பல் முறித்தாள்.

கொட்டாவி விட்டாள்.

விடிந்து நீண்ட நேரமாகிவிட்டது என்பதை பல விதமான பறவைக் குரல்களில் இருந்து சூரிய வெளிச்சக்கதிர்கள் ஜன்னல் கர்ட்டன்களில் ஓடி யிருப்பதிலும் தெரிந்தன. நைட் லாம்ப் வெளிச்சம் இல்லை.

பெட் காலியாக இருந்தது

தங்கை சுரபி குளித்துக் கொண்டிருக்க வேண்டும் - குளியலறை சுவரில் தண் பீய்ச்சும் சப்தம் -

இவள் கீழே இறங்கி வந்து டெலிபோனின் ரிசீவரை எடுத்து காதோரம் இறங்கியிருந்த முடிகளில் தழுவ விட்டாள்.

"காமினி ஹீயர்"

மறுமுனையில் பேசுவது யாராக இருக்கும்.

ஒரு வேளை போலீஸ்...

குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கும் என்பதைப் போல் இவள் இரவில் துணிச்சலாக செய்து முடிக்கப்பட்ட பயங்கரமான நிகழ்ச்சியைக் கண்டு மிரண்டு போயிருந்தாள்.

"நான் சபி பேசுறேன்... சுரபியைக் கூப்பிட்ரீங்களா! சபி பேசுவதாகச் சொல்லுங்கள்"

ஒரு பெண்ணின் குரல் -

"சரிம்மா... கொஞ்சம் வெயிட் பண்ணும்மா... குளிக்கிறான்னு நினைக்கிறேன்"

மார்பில் பாவாடையை முடிந்துவிட்டு சுரபி வேக மாக வந்து காண்டிருந்தாள். தலைக்குக் குளித்து விட்டு முடிகளை வெண்மையான தேங்காய்பூ டவ

லில் அடக்கியிருந்தாள் - ஈரத்தைத் துடைந்திருந் தாள்.

"யாரக்கா அது?"

"சபியாம்... உன்னோட சினேகிதியாக இருக்க ணும்னு நினைக்கிறேன்..."

சொல்லிக் கொண்டே ரிசீவரை அவள் கையில் கொடுக்க முகம் பிரகாசமாகி அதைக் காதோரமா கக் கொடுத்தாள்.

"ட சபி... குட்மார்னிங்டி..."

"வெறி குட்மார்னிங்... ஸாரி... வெரி குட் மார்னிங்... உன்னை நினைத்துக் கொண்டதும் உன்னையும் அறியாமல் வார்த்தைகள் ஓடிவந்து எழுந்து விடு கின்றன."

மறுமுனையில் பேசியது -

இன்னார் என்பது தெரிந்தால் நிச்சயமாக சுரபிமீது அனுதாபம் கொள்வீர்களா! அய்யோ பாவம் என்று இரக்கம் காட்டி, அவள் சிலகாலமாவது உயிர்வா ழவேண்டும் என்ற இறைவனை நோக்கிப் பிரார்த் தனை செய்வீர்களா? அல்லது ஆத்திரப்பட்டு அவளை இழுத்துப்போட்டு அடிப்பீர்களா!

அது சபி என்று சொல்லிக்கொண்டு பெண்ணின் குரலை விநியோகித்தது நிஜமான பெண் அல்ல... மீசை வைத்த அழகனான சபேஷ்...

அவன் யார்?

ஆச்சரியமும் - அதிர்ச்சியும் அடைவீர்கள். அம்பரீ ஷின் அருமை மகனான சபேஷ் -

“சரி... டீ... சபி.. காலைல அப்படி என்னடி அவசரம்! போன் பண்ணினே... ஏதாவது முக்யமா?”

நோட்ஸ் எடுக்காமல்

“அப்படி ஒன்றும் இல்லை உங்கிட்ட பேசணும் போல இருந்தது.... ரிங் பண்ணினேன்.”

“விஷயத்தை சொல்லுடி... நோட்ஸ் ஏதாவது வேணுமா! நீதான் நோட்ஸ் எடுக்காம ஸ்கூலில் தூங்கிட்டிருந்தியே...?”

“ஆமாண்டி சுரபி. இப்போதும் தூங்கணும் போல இருக்கு. வர்ரியா.”

சுரபியின் கண்களில் மிரட்சி ஏற்பட அவற்றில் எந்த விதமான பிரதிபலிப்புகளும் தெரியாமல் ஜாக்கி ரதை கொடுத்தாள்

அக்கா மனதில் சந்தேகம் தோன்றி விடகூடாது. அவள் கடினமாக உழைத்து எப்படியோ வளமான வாழ்க்கையைத் தேடிக் கொண்டிருக்கிறாள்.

சுரபி கீழ்க்கண்ணால் அக்காவைப் பார்த்துக் கொண்டாள். கச்சிதமாகச் சொன்னாள்.

“நான் இன்னிக்கு சீக்கிரமாகவே ஸ்கூலுக்கு வந் திடுவேன். என்னோட நோட்டையும் எடுத்துக் கொண்டுவர்றேன். நீயும் உன்னோட புக்ஸை மொத்தமாகக் குடுடி..”

“இருக்கிரேண்டி. சீக்கிரமாக வா”

“சரிடி. போனை வச்சிடு”

சுரபி ரிசீவரை வைத்து விட்டு சற்றுத்தள்ளி நின்றி ருந்த அக்காவைக் கவனித்தாள்.

சந்தேகம் தப்பியிருக்குமா!

அப்படித் தெரியவில்லை.

"யாரும்மா போன் பண்ணினது"

"என்னோட ஃபிரண்ட் சபி."

சொன்ன போது சுரபியின் இருதயம் நொண்டிக் குதிரையாய்த் தடுமாறியது, அக்கா உண்மை யைத் தெரிந்து கொண்டால் அது தப்பாகி விடும்.

அடுத்த சில நிமிஷங்களில் காமினி குளித்து விட்டு வேறு உடையில் வந்தாள். கண்கள் சிவந்து இமை கள் வீங்கி முகம் விளறியிருந்தது. தன்னுடைய தோற்றமே தன்னைக் காட்டிக் கொடுத்து விடும் போலிருந்தது.

சுரபியும் வேறு உடையினுள் நுழைந்து பள்ளி யூனி பாரத்தில் வந்தாள்.

ஆயா இரண்டு பேர்களையும் டைனிங் நாற்காலி களில் உட்கார வைத்து இட்லி தக்காளிச் சட்னி வைத்து மிளகாய்ப் பொடியில் தேங்காய் எண் ணெய் ஊற்றினாள்.

காமினி எதையும் ருசித்துச் சாப்பிடும் மன நிலை யில் இல்லை.

நெஞ்சுக்குள் ஓர் இனம் தெரியாத அச்சம் பம்பர மாகச் சுழன்று கொண்டு இருந்தது.

குற்றம் செய்து விட்டோமே என்ற அச்ச உணர்வு -

மாருதிக்காரை ஓட்டிக் கொண்டு போன பெய ரர் மதன் எதிரியாக மாறாமல் இருக்க வேண்டும். மனித மனம் எப்படி வேண்டுமானாலும் அலைபா யும்.

சுரபி மாறுப்பட்ட சந்தோஷமான நிலையில் இருந் தாள். காதலன் சபேஷைச் சந்தித்து விட வேண்டும் என்ற தவிப்பு

அவன் மீது ஏகப்பட்ட மயக்கத்தில் இருந் தாள். அவனைப் பார்க்காமல் இருக்கவே முடி யாது. அவனைக் காதலிப்பதாக சிநேகிதிகளிடத் தில் சொல்லி பெருமைப்பட்டுக் கொள்வதில் குதூ கலமே அடைவாள்.

பிறவி எடுத்திருப்பதே அவனுக்காகத்தான் என்ற எண்ணம்.

இரண்டு பேர்களும் சாப்பிட வேண்டுமே என்பதற் காக தலா இரண்டு இட்லிகள் வீதம் வயிற்றுக்குள் அனுப்பி விட்டு எழுந்தார்கள்.

ஆயா பீங்கான் கோப்பைகள் வழிய, ஆர்லிக்ஸ் கொண்டு வந்து கொடுத்தாள். கேட்டாள்.

பெரிய பொண்ணு நிருபமா இருக்கிற இடம் ஏதா வது தெரிந்ததா காமினி....

காமினிக்கு அந்த இடம் தெரியும்... அம்பரீஷ் அவ ளைக் கொன்று விட்டான்.

“ஆயா... ஓடிப்போன அவளைப் பற்றி ஏன் பேசறே... நான் அவளை மறந்து விட்டேன்... காதல் இந் தக் குடும்பத்துக்கே பளு. காதலிக்கிறவங்களைக் கண்டால் கூட எனக்கு மனம் பொறுக்காது.”

இந்த வார்த்தைகள் சுரபியின் பிஞ்சு நெஞ்சத் தைத் தீயாகச் சுட்டன. அக்கா காதலையே வெறுக் கும் குணம் கொண்டவளாக இருக்கிறாளே...

மறுபடியும் டெலிபோன் மணியடித்தது.

சுரபி தடுமாறினாள்.

சபேஷ் திரும்பவும் போன் செய்திருக்க வேண்டும். அவன் சுறு சுறுப்பான ரகம்-

அக்கா எடுத்துப் பேசினால் குரலின் தன்மையை வைத்து ஆண் தான் என்பதைக் கண்டுபிடித்து விடக் கூடும்.

சட்டென்று முந்திச் சென்று ரிசீவரை எடுத்து காதோரமாகப் பிடித்துக் கொண்டு,

"ஹலோ... ஐம் சுரபி ஸ்பீக்கிங்" என்று சொன்னாள்.

"நான் இன்ஸ்பெக்டர் மம்முட்டி" என்ற குரல் மலை யாள வாசனையுடன் வந்தது.

சுரபி அவஸ்தையாக நெளிந்தாள். இன்ஸ்பெக்டர் எதற்காக இந்தக் காலை நேரத்தில் டெலிபோன் செய்ய வேண்டும்!

ஏதாவது முக்கியமான விஷயம்...

"ஜஸ்ட் ஹோல்டான் ப்ளீஸ்." சொன்ன சுரபி,

"அக்கா, இன்ஸ்பெக்டர் லைனில் இருக்கிறார். பேசு." என்றாள்.

காமினி அதிர்ச்சியாய் வந்தாள்.

நிச்சயமாக விரும்பத்தகாத ஏதோ ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அம்பரீஷ் பிணமாகி ஆற்று நீரால் அடித்துச் செல்லப்பட்டு கடலில் சங்கமமாகி கரையில் ஒதுக்கப்பட்டிருக்கலாம்.

போலீஸார் அந்த உடலைக் கைப்பற்றி விட்டு அவருடைய ஹோட்டலில் பாடுகிறவள். நடனம் ஆடுகிறவள் என்ற முறையில் விசாரிக்க முன்வந்திருக்கலாம்.

இவளுக்கு நெற்றியிலும் கழுத்துச் சரிவிலும் வியர்த்தது.

ரிசீவரை வாங்கி சந்தேகம் வராத புன்னகையை உதடுகளுக்குக் கொடுத்து விட்டு,

"காமினி ஸ்பீக்கிங்" என்று சென்னாள்.

"மிஸ் காமினி... இந்தக் காலை நேரத்திலேயே குட்மார்னிங் சொல்ல முடியாத நிலையில் இருக்கி றேன். சில மாதங்களுக்கு முன்னால் உங்க சகோ தரி நிருபமா காணாமல் போயிட்டதாக ரிப்போர்ட் பண்ணினீங்க... ஞாபகம் இருக்கிறதா?"

"ஆமா... அக்கா கிடைச்சிட்டாங்களா?" பரபரப்பில் காமினி ஆர்வமானாள்.

"இல்லை அவளைக் கடத்திக் கொண்டு போன தாக பொன்ராஜ் எங்கிற ஒருத்தன்மேல புகார் குடுத்திருந்தீங்க... இல்லையா?"

"ஆமா... இன்ஸ்பெக்டர்."

"அவன் கிடைச்சிருக்கான்."

"அப்படிங்களா?"

"இது உங்களுக்குச் சந்தோஷத்தைக் குடுக்கிற செய்தியாக இருந்தாலும் நடந்திருக்கிற நிகழ்ச்சி பலமான அதிர்ச்சியைக் கொடுக்க கூடியது. உங் கள் ஹோட்டல் முதலாளி அம்பரீஷை அவன் கொலை செய்திருக்கிறான்"

"கொலையா!"

இவள் கத்திவிட காதுகளைக் கூர்மையாககிக் கொண்டு பக்கத்திலேயே நின்றிருந்த சுரபி அதிர்ந் தாள்.

அம்பரீஷ் வேறு யாரோ அல்ல... தன் காதலன் சபேஷின் தந்தை.

"அந்த மனிதரின் மூக்கு அறுபட்டிருக்கிறது ஆற்றங்கரையில் பிணத்துடன் இருந்த பொன்ராஜை லோகல் போலீஸ்காரர்கள் கைது செய்திருக்கிறார்கள்."

பொன்ராஜ்... அதாவது அக்கா நிருபமாவைக் கடத்திக் கொண்டு போனதாகக் கருதப்பட்ட பொன்ராஜ் கைது செய்யப்பட்டிருக்கிறான்.

செய்த குற்றம்... கொலை செய்து விட்டானாம்!

ஹோட்டல் அதிபர் அம்பரீஷை அவன் எப்படி...?

மூக்கை அறுத்து! இவளுக்கு வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது.

மூக்கை அறுத்தவள் இவள். கொடூரமான மரணத்தைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக குற்றுயிருடன் துடித்துக் கொண்டிருந்த அவள் தள்ளினாள், அவனுடைய உடலை இழுத்துச் சென்று மிகவும் தாழ்வான பள்ளத்தில் ஓடும் ஆற்றில் உருட்டி தள்ளினாள்.

இந்தக் காரியங்களை இவள் பழிவாங்கும் எண்ணத்துடன் செய்ய அவன் எப்படியோ இதில் சிக்கிக் கொண்டிருக்கிறான்

"மேடம் இப்பொழுது அவன் போலீஸ் ஸ்டேஷனில்தான் அண்டர் அரஸ்டில் இருக்கிறான்... நீங்கள் உடனே வாருங்கள்... அவனை விசாரித்து உங்கள் சிஸ்டர் இருக்கிற இடத்தைக் கண்டு பிடிக்கிறதுக்கு உதவியாக இருக்கும்"

சிஸ்டர் இருக்கும் இடம்...

அது இவளுக்குத் தெரியும்... அம்பரீஷ் அவளைக் கொன்று விட்டதாகக் கூறி விட்டான் உடல் தேயி லைச் செடிகளுக்கு உரமாகி விட்டதாம்.

ஒரு வேளை அது பொய்யாக இருந்து உயிரோடு கூட இருக்கலாம்.

பொன்ராஜை முதலில் விசாரிக்க வேண்டும். சகோதரியைப் பற்றிய உண்மைகள் கண்டறிய அது உதவியாக இருக்கும்.

“நான் எங்கே வரணும் மிஸ்டர் இன்ஸ்பெக்டர்.”

அவர் இடம் சொன்னதும் இவள் ரிசீவரை அதன் இடத்தில் வைத்து விட்டு நிமிர்ந்தாள்.

சுரபியைப் பார்த்தாள்.

அவள் முகவாட்டத்துடன் நின்றிருந்தாள் சந்தோ ஷம் காணாமல் போயிருந்தது.

சுரபியிடம் உரையாடலைச் சொன்னாள்.

என்ன பேச வேண்டும் என்று சுரபிக்குப் புரி யவில்லை. என்ன சொன்னாலும் அது தப்பைக் கொண்டு வந்து விடும் போல் இருந்தது, மௌனம் ஒன்றே சரியான வழியாகத் தெரிந்தது.

# 9

கொச்சி புறநகர் காவல் நிலையம்.

வழக்கம் போன்ற சந்தடியான சுறுசுறுப்பு.

சுரபியைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பிவிட்டு காமினி தன்னுடைய மாருதி காரில் பயணித்து வந் தாள்.

காவல் நிலையம் முன்னால் எஞ்சின் இயக்கத்தை நிறுத்திவிட்டு இறங்கினாள். உள்ளே வந்து பார்த் தாள்.

மேஜைகள் எதிரில் போலீஸ் துறையைச் சார்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ரைட்டர் என்று பலர் அமர்ந்தி ருக்க வணங்கினாள்.

உள்ளறையினுள் நடுத்தர வயதைக் கொண்ட உய ரமான மனிதர் இன்ஸ்பெக்டர் உடம்பில் நாற்காலி யில் தெரிந்தார்.

அவர் எதிரில் நின்று கொண்டிருந்த தாடிக்காரன்

காமினிக்கு அடையாளம் தெரிந்து விட்டது.

அவன்-

பொன்ராஜ் காமினிக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த பொன்ராஜா இவன்!

நம்ப முடியவில்லை. பொன்ராஜ் என்ற பெயரைக் கொண்ட அந்த இளைஞன் ஆண்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாக- எப்பொழுதும் துருதுருவென்று இருப்பான். துடிப்பாக நடைபோடுவான்.

பாண்டு... ஷர்ட்... ஜீன்ஸ்... என்று வேளைக்கோர் உடை உடுத்தி அசத்துவான்

கலகலப்பாகப் பேசி அவன் இருக்கும் இடத்தை களைகட்டச் செய்து விடுவான்.

தினசரி ஷேவிங் மீசையை ஒதுக்கிவிட்டு முகத்தை மழுமழுப்பாக வைத்திருப்பான்.

ஆனால் இப்போதைய நிலை... இவன் பழைய பொன்ராஜ் அல்ல... துடுக்குத்தனம் இல்லை தாடி கன்னங்கரேலென்று வளர்ந்து மோவாயையும், கன்னத்தையும் மூடியிருந்தது. தலைமுடிகள் வாரி விடப்படவில்லை. கண்களில் ஆழ்ந்தச் சோகம் உடைகளில் கிழிவு... பார்ப்பதற்குப் பரிதாபமான தோற்றம்.

அக்கா நிருபமா அவனுடைய கம்பீரமான தோற் றத்தையும் குறும்புத்தனமான விளையாட்டுக்களி லுமே அன்றைய தினம் மனத்தைப் பறிகொடுத்து மயங்கினாள்.

இன்ஸ்பெக்டர் மம்முட்டி அவளுக்கு நாற்காலி யைக் காட்டி அமரும்படிச் சொல்லி அவள் உட் கார்ந்ததும் -

"மேடம்... இந்த நபரைப் பாருங்க.... இவன் இன் னார் என்பது தெரிகிறதா?" கேட்டார்.

காமினி கண்களுக்கு முழுக்கவனத்தையும் திருப்பி அவனை ஏறிட்டாள்.

அவன்... அதே இளைஞன் பொன்ராஜ் அந்தக் கண்கள்... அகன்ற நெற்றி... இடதுபக்க உதட்டோ ரம் சின்ன மச்சம்... இரட்டை நாடி.

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர்... நான் நினைக்கின் றேன்... இவன் தான் பொன்ராஜ் என்று... தோற்றம் துவண்டு போயிருந்தபோதிலும் அடையாளம் தப் பவில்லை"

இன்ஸ்பெக்டர் மம்முட்டி. - கம்பீரமான உடம்பு கொண்டவர்- மிகப் பெரிய மீசை மேலே நோக்கிப்

பார்த்துக் கொண்டிருக்க- ஒரு ராணுவ கமாண்டருக்குரிய மிடுக்கு.

நிறம் இலேசான கருமை

“பொன்ராஜ்... இந்த அம்மையாரைப் பார்... உனக்குத் தெரிகிறதா!”

அவன் ஜீவனற்றவன் போல் நின்று திரும்பினான்- எந்தவிதச் சலனங்களும் இல்லாத கண்களுடன் பார்த்தான்.

அவன்தொடர்ந்து வற்புறுத்தி விசாரிக்கவே அவன் மிகுந்த சிரமத்துடன் உதடுகளைப் பிரித்தான்

“இவங்க என் நிருபமாவோட சிஸ்டர்...” சொன்னான்.

அந்தக் குரல் சுரத்தின்றி இருந்தது.

“மிஸ்டர் இன்ஸ்பெக்டர்... இவனிடம் நான் சில கேள்விகள் கேட்க நீங்க பெர்மிட் பண்ணணும்.”

“தாராளமாகக் கேட்கலாம்...” காமினி எழுந்து நின்றாள் - குழப்பமடைந்த மன நிலையில் பேசலானாள்

“என் சிஸ்டர் நிருபமா எங்கே? அவள் உங்களுடன் தானே வாழுகிறாள்?”

இவள் தொண்டை இறுகியது. கண்களுக்குள் நீர் ஊற்றெடுத்து முட்டித் ததும்பியது.

அவன் பேசமுடியாதவனாகத் தத்தளித்து சொன்னான்.

“நிருபமாவும் நானும் கொச்சியிலிருந்து வெளியேறிவிட நினைத்து புறப்பட்டது உண்மை... பஸ் ஸ்டாண்டில் அவளை உட்கார வைத்து

விட்டு சோடா வாங்கிக் கொண்டுவர கடைக்குப் போனேன். திரும்பி வந்து பார்த்தபோது என் நிருப் பமா இல்லை... அன்று முதல் இன்று வரையிலும் அவளைத் தேடிக் கொண்டே இருக்கிறேன்.”

அவன் குறைந்த ஸ்தாயியில் சொல்லி விட் டுக் குனிய கண்ணீர் ‘ப்ளக்’ கென்று ஓடி வந்து உருண்டு விழுந்தது.

நம்பலாமா!

அவன் சொன்ன உருக்கம் நம்பிக்கையைக் கொடுக்கும் விதத்திலேயே அமைந்திருந்தது.

அம்பரீஷைச் சந்தித்தபோது அவன் சொன்ன வார்த்தைகள்...

மிகவும் எக்காளமாக அவளைக் கொன்று உட லைப் புதைத்து விட்டதாக அறிவித்தான் மிகவும் திமிராகவே பேசி மிரட்டினான். அவளுக்கு ஏற்பட்ட கதி தனக்கும் சுரபிக்கும் வந்து விடும்போல் எச்ச ரித்தான்.

ஆனால் அவனைச் சந்தித்ததையோ... மரண மிரட் டல் கொடுத்ததையோ இங்கேயெல்லாம் சொல் லிக் கொண்டிருக்க முடியாது.

சொன்னால் தன்னுடைய விரல்களே தன்னு டைய கண்களைக் குத்திக் காயப்படுத்தியது போல் முடிந்து விடும்.

அவன் குனிந்த நிலையிலேயே புறங்கையைக் கொடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தான்.

கேட்டான்.

“நிருபமா என்றைக்காவது திரும்பி உங்க வீட்டுக்கு வந்தாளா?”

வரவில்லை என்பதைப்போல் இவள் ஈரம் கசியும் கண்களுடன் தலையசைத்தாள்.

இன்ஸ்பெக்டர் மம்முட்டி தன்னுடைய செல்லப் பிராணியான கொடுவாள் மீசையை மேல்நோக் கித் தட்டிவிட்டுக்கொண்டு அவனை நேரடியா கவே குற்றம் சாட்டினார்.

“பொன்ராஜ்.. .நீ போட்டிருக்கும் வேடம் இங்கே எடுபடாது.. நான் பழம் தின்று கொட்டை போட்ட வௌவால்... எடா கேள்... நிருபமாவை நீதான் எங் கேயே கொண்டு போய் ஒளித்து வைத்திருக்கிறே”

“இல்லை...”

“ஒளித்து வைக்கலேன்னா அவளைக் கொலை செய்து விட்டு...”

அவன் பதில் சொல்லி விம்மி கண்ணீரை உதற விட்டான்.

இதுவும் போலித்தனமான நடிப்பு என்ற இன்ஸ் பெக்டர் எண்ணினர். அவனைப் போன்றவர்க ளைச் சுலபத்தில் நம்பி விடமுடியாது.

அவன் மீது இருவிதமான குற்றச்சாட்டுகள்

ஒன்று நிருபமா கடத்தப்படல் அவளும் இதனால் கொலை செய்ய பட்டிருப்பாளா என்ற சந்தே கம், இன்னொன்று அம்பரீஷின் மூக்கை வெட்டிக் கோரப்படுத்தி ஆற்றில் தள்ளிக் கொலை செய்து விட்டான் என்பது!

பின்னதையும் முன்னதையும் இவன் மறுத்த போதிலும் எதற்காக மிகுந்தப் பிரயாசையுடன் ஒப்புத்துச் கொண்டான்.

அவன் சொன்னவை

நான் தான் அம்பரீஷைக் கொலை செய்தேன்.

நிருபமா என்ற ஆட்டக்காரியைக் கொலை செய்ததும் நான் தான்!

ஆனாலும் அவன் தான் இந்த இரண்டுக்கு குற்றங்களையும் செய்தான் என்பதற்கு ஆதார்ங்கள். ஐவிட்னெஸ்?

சொல்ல முடியவில்லை.

இருப்பினும் அவன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து கிடைக்கப் போகும் தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தான்.

வாழ்க்கை ஒரேயடியாய்க் கசந்து போனதே அதற்குக் காரணம்.

காமினி அவன் நின்றிந்த நிலையைக் கண்டு இரக்கப்பட்டாள்

தன் சகோதரியின் மரணத்துக்கு அவன் எந்த விதத்திலும் காரணமாக இருக்க முடியாது என்பது நன்கு தெரிந்தது. ஏனெனில் அவன் அம்பரீஷ் மரணத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட போதிலும் எந்தத் தப்புமே செய்யவில்லை என்பது தான் உண்மை. செய்யாத குற்றத்தை தானே செய்ததாக ஒப்புக் கொண்டிருக்கிறான்.

ஒரு நிரபராதி தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறான். அவனைக் காப்பாற்ற

வேண்டும். எப்படி.? யோசித்து - தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்தாள். அவன் சார்பில் விவாதத் திற மையில் புகழ் பெற்ற ஒரு வக்கீலை வைத்து வாதாடி இரு வழக்குகளையுமே உடைத்து விட லாம் என்பதுதான் அது!

# 10

போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்ட பின்பு அம்பரீஷின் உடல் அவனுடைய மகன் சபேஷிடம் ஒப்படைக் கப்பட்டது.

உடல் பங்களாவுக்கு எடுத்து வரப்பட்டு முன் ஹாலி னுள் மலர்க் குவியலின் மீது துயில் கொள்ள அனு மதிக்கப்பட்டது.

கொச்சின் மாநகரிலுள்ள பணக்கார வர்க்கம் பூரா வும் அங்கே தான் வந்து கும்பல் போட்டிருந்தது.

செயற்கையான சோகம் பரவியிருக்க, மலர் வளை யங்கள்- பூமாலைகள் என்று நிரப்பப்பட்டிருந்தன.

துக்கம் அனுசரித்து தன் துயரத்தைக் காட்ட வேண்டும் என்பதற்காக காமினி மிகுந்த அக்கறை யுள்ளவள் போல் உடம்புக்குக் கருப்புச் சேலை யைத் தந்து வருகிறவர்களை முன் நின்று கவனித் துக் கொண்டிருந்தாள்.

அவள் ஹோட்டல்களில் ஆரவாரமான ஆட்டக்கா ரியாகவும் - அட்டகாசமான பாடகியாகவும் இருந்த தால் ஏராளமான பணக்கார ரசிகர்கள் இருந்தார் கள். அவர்கள் இப்பொழுது காமினியின் சந்தன உடம்பின் நிறத்தின் செழுமையான பொலிவை

கருப்பு உடையினுள் பார்த்து உள்ளூர கதகதப்பு ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

கருப்பு நிற உடை அவளுடைய தோற்றத்தை அற்பு தமான நிறத்தில் எடுத்துக் காட்டியது.

சிலர் கொண்டு வந்து கொடுத்த மலர் வளையங் களை இரண்டு கைகளாலும் வாங்கி வைத்த வண் ணம் இருந்தாள்.

இடுப்புப் பாகத்தில் நின்று கொண்டிருந்த இவள் முகத்தைப் பார்க்கிறாள்.

மூக்கில் பாண்டேஜும் - தலையில் முண்டாசு போல் கட்டும் போடப்பட்டிருந்தது.

இவளுக்குப் பக்கத்தில் சபேஷ் கருப்பு நிற பைஜாமா ஜிப்பாவில் தெரிந்தான். மரணமாகி இறுதி யாத்திரைக்குத் தயாராகிக் கொண்டிருக்கி றவன் மனித ஜீவன்களால் ஒதுக்கப்பட்ட தந்தை என்பது அவனுக்குத் தெரியும்.

பங்கு தாரரான வழுக்கு தலை சீமான் குருமூர்த்தி கோட்டு பாண்டு உடையில் கனத்த ஷோபாவி னுள் புதைந்து உட்கார்ந்திருந்தார். வந்து போகி றவர்கள் பக்கத்தில் அமர்ந்து ஆறுதல் சொல்லிச் சென்ற வண்ணம் இருந்தார்கள்.

எல்லாமே சொந்த மகன் உட்பட எல்லோருமே போலித்தனம் -

சீமான் குருமூர்த்தியின் கரிசனங்களும் போலியான அக்கறையே. செயற்கைத் தனமான நீலிக் கண் ணிரே.

காமினி இங்கே வந்து மிகவும் அக்கறையுள்ள வள் போல் நடந்து கொண்டதின் முக்கிய கார

ணம் யாருக்காவது தன் மீது சந்தேகம் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்கும். அவர்களுடைய நடவடிக்கைகளை நேரடியாக ஆராய்வதற்குத்தான்!

உண்மையான நிலையைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப நடந்து கொள்வதே புத்திசாலித்தனம்!

சபேஷ் இவள் பக்கம் வந்து அடிக்கடி சோக நடைபோட்டான். குனிந்து இவளுடைய காதோரம் எதையாவது பேசி அடிக்கடி ஆலோசனைகளும் பெற்றுக் கொண்டான்.

கருப்பு உடையில் அவனுடைய கோதுமை நிறம் மேலும் பளிச்சென்று துலங்கித் தெரிந்தது.

அளவாக உயர்ந்து இறுக்கமான தேகக் கட்டை வாங்கியிருந்ததுடன் தந்தையின் காமத் தீ - பரவும் கண்களையும் இயல்பாகவே பெற்றிருந்தான்

அவனுடைய பார்வை பார்க்கக் கூடாது இடங்களையெல்லாம் பார்த்து ஆணியடித்தன. கண்ணீர் விட்டுக் கலங்க வேண்டிய கண்கள் சீமாட்டிகளின் உடம்பு பூராவும் தடையின்றி ஓடின.

காமினிக்கு ஏற்கனவே அவனைப்பற்றி நன்குத் தெரியும் - சுருக்கமாகச் சொல்லப் போனால் தந்தையை அப்படியே உரித்துக் கொண்டு பிறந்து விட்ட... மகன்!

முறைப்படியான சடங்குகள் முடிந்தபின்பு

அம்பரீஷ் உடல் பிரம்மாண்டமான ஊர்வலத்தோடு எடுத்துச் செல்லப்பட்டது,

பெரிய சாவு என்பதால் வழி நெடுகிலும் உள்ள கடைக்காரர்கள் எல்லோரும் தங்கள் கடைகளை முன்னதாகவே சாத்தி பூட்டி ஓடி விட்டார்கள்.

# 11

மறு நாள், மாலையில் பெயரர் மதன் ஹோட்டலுக்கு வந்து கொண்டிருந்தான்.

எதிர்ப்பட்ட காமினி சந்தித்தாள். ஷாப்பிங் வந்திருந்தாள்

பேசிக்கொண்டே இணையாக நடந்து அவள் மெல்ல விசாரித்தாள்.

“மதன்.. காரை நீ ஓட்டிக் கொண்டுபோய் நிறுத்தியதை யாரும் கவனிக்கலியா?”

“நான் ஜாக்கிரதையாக இருந்தேன் - இரண்டு கார்களுக்கு நடுவே இடைப்பட்ட இடத்தில் காரைக் கொண்டு போய்ச் சொருகி நிறுத்தினேன். யாருக்கும் தெரியாமல் இறங்கி வந்து விட்டேன்.

“புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருக்கிறாய்... கவனம்... வெளியே தெரிந்து விட்டால் இருவருக்கும் ஆபத்து”

“அம்பரீஷ் செத்துப் போனதைப்பற்றி ஹோட்டலில் உள்ளவங்க என்ன பேசிக்கிறாங்க?”

“பொன்ராஜ் அவனைக் கொன்று விட்டானாம்...”

இவள் ஆறுதலடைந்தாள்... ஆபத்திலிருந்து தப்பியது போன்ற உணர்வு...

“என் மேல யாருக்காவது சந்தேகம்?”

“அப்படி ஒன்றும் தெரியல... உங்க மேல சந்தேகப் பட்ரதுக்கு எதுமே இல்லை...”

பேசிக் கொண்டே நடந்த காமினி நெற்றியில் விரலைக் கொடுத்துத் தேய்த்துக் காதோரமாகக் கொண்டு வந்து அழுத்தினாள்.

“ஸிவ்வியர் ஹெட்டேக்...” தலை வலிக்கிறது என்று இவள் சொன்னதும் அவன் பதறிப் போய் முன்னே வர

பஸ்களில் பயணிப்பவர்களும் - பாதசாரிகளும் வேடிக்கைப் பார்த்தார்கள்,

காமினி குடும்பத்தனமாக ஒற்றைச் சடை போட்டு நெற்றிக்குச் சின்னதாக ஒரு சிவப்பு ஸ்டிக்கர் பொட்டு வைத்து சிவப்பு நிறப்புடவை ரவிக்கையு டன் தெரிந்தாள்.

இயற்கையின் வளர்ச்சிகள் இவள் பெண்மைக் கோலத்தை கம்பீரமாக எடுத்துக்காட்டி அசத்தின.

வானொலியில் கிரிக்கட் விளையாட்டை வர் ணிக்க வல்லுனர் இருப்பது போல் இவள் அழகான தோற்றத்தை அப்படியே வர்ணிக்க ஒரு வல்லுனர் இருந்தால் எவ்வளவு தத்ரூபமாக இருக்கும்.

எதிர்க் காற்று இவள் உடம்பில் ஸ்நேகத்துடன் ஓடி யதால் உடைகள் உடம்போடு ஓட்டிக் கொண்டு கச்சிதமாக அமைந்து ஒரு பிரமிப்பையே உண்டு பண்ணின.

“காப்பி சாப்பிட்றீங்களா காமினிம்மா?”

“சாப்பிட்றீங்களாவா? சாப்பிடணும். பக்கத்திலே ஏதாவது ஹோட்டல் இருந்தா பாருங்க.”

பார்த்தான் -- எதிரிலேயே ஒரு ஹோட்டல் சிக்கி யது.

இரண்டு பேர்களும் உள்ளே சென்று ஃபேமிலி அறையினுள் போடப்பட்டிருந்த பாலிமார் நாற்கா லிகளில் எதிர் எதிரே அமர்ந்து பரவினார்கள்.

அது ஒது விசாலமான ஹால்

அங்கே சின்னச் சின்னத் தடுப்புகள்-ஆங்காங்கே இருப்பவர்களை இங்கிருந்தபடியே பார்க்கமுடியும்

இரண்டு பேர்கள் மட்டுமே சாப்பிடும் வசதிகள்

சப்ளையர் உள்ளே வந்து மூக்கை நீட்டி “என்ன சாப்பிட்றீங்க?”

மதன் கும்பகோணம் ஸ்பெஷல் டிகிரி அங்கே கிடைப்பதால் அதற்கு ஆர்டர் கொடுக்க்

விரைவிலேயே இரு டபரா செட்டுகளில் மணக் கும் காப்பி சூடாகவே ஆவி பறக்க வந்தது.

இரண்டு பேர்களும் பருகினார்கள்.

காப்பி தொண்டையினுள் பிரவேசித்ததும் மூளைப் பிராந்திய வலையில் ஒத்தடம் கொடு அது போல் சுகமாக இருந்தது

இவள் ஒரு திருப்தியுடன் பார்த்ததும் கலகல வென்ற சிரிப்பொலி பின்னாலிருந்து நடக்கும் வழி யில் கேட்டது.

இப்படியும் ஒரு பெண்ணால் சிரிக்க முடியுமா என்ற திகைப்பில் இவள் திரும்பியபோது, கண்களுக்குள் சிக்கிய அவர்கள்...

காமினி ‘திக்கென்று' அதிர்ந்தாள். அங்கே ஓர் இளஞ் ஜோடிகள் அதில் பெண்...

சுரபி மாதிரி... மாதிரியல்ல... நிச்சயமாக சுரபியே தான்!

பக்கத்தில் அவளுடைய தோளோடு இடித்துக் கொண்டு நடந்து வருகிறவன்...

அவன் சபேஷ் மாதிரி... நிறைய தலைமுடிகளு டன்...

ஆமாம்... அவன் நிச்சயமாக சபேஷ் தான்.

இரண்டு பேர்களுமே ஏகப்பட்ட மயக்கத்தில் சிரித் ததால் எங்கே இருக்கிறோம் என்பதே தெரிய வில்லை.

சுரபி ஸ்கூல் யூனிபார உடையோடும் - அவன் கார்ட்ராய் பாண்டு ஷர்ட்டோடும் வந்திருக்கிறார் கள்.

அவளுடைய தலைமுடிகள் கலைந்துப் பரவிக் கிடக்க கண்கள் பெரிய சைஸ் கோகோ மூக்குக் கண்ணாடியை வாங்கியிருக்கின்றன.

சுரபி இளமை வேகத்தில் ஆர்த்தெழும் புடைப்பில் யாரையும் ஈர்க்கிற காந்தமாகத் தெரிந்தாள்.. அவ ளுக்குக் கொஞ்சம்கூட லஜ்ஜை இல்லை... அவ னோடு ஒட்டிக் கொண்டு... நெஞ்சில் சாய்வது போல் நடக்க- இடுப்பு வளைவில் கை கொடுத்து...

காமினிக்கு நிலைமை புரிந்து விட்டது

சுரபி அவன் தன்னைச் சுதந்திரமாகக் தொட அனு மதியளித்திருக்கிறாள். அவனும் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தாராள மாகவே தொடுகிறான்.

“உங்க தங்கச்சிதான்...” மதன் இவன் காதுகளுக்கு மட்டும் கேட்கும்படியாகச் சொன்னான்.

அவர்கள் கடந்துச் சென்று கடைசி ஓரத்தில் இருந்த தடுப்பறையை உபயோகித்துக் கொண் டார்கள்.

திரும்பி முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந் திருக்கும் அவர்களை இங்கிருந்தபடியே பார்க்க முடிந்தது.

காமினியின் நரம்புகள் பூராவும் ஆவேச ரத்தம் பீய்ச்சியடிக்க ஆரம்பித்தது. என்பதற்காகவே தான்.

இந்தத் தங்கையை பாதுகாக்க வேண்டும் அவள் கற்புடன் உயர்ந்து நின்று வாழ வேண்டும் என்பதற் காகத்தான்...

பொருத்தமாக ஒருவனைத் தேர்ந்தெடுத்து அவ ளுக்கு இந்தக் கொச்சி மாநகரமே பிரமிக்கும் வண் ணம் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்ப தற்காகத்தான்...

அவளை அபகரிக்கத் துணிந்த பெரியமனி தன் அம்பரீஷுக்கு ரத்த அழைப்பிதழ் கொடுத்து கேனன் காட்டேஜுக்குத் தந்திரமாக வரவழைத்து முதலில் அவனுடைய குடமிளகாய் மூக்கை வெட்டி ரத்தக்களரியாக்கி ஆற்றங்கரைக்கு இழுத் துச் சென்று உருட்டி தள்ளிவிட்டு...

“மதன் என்ன செய்றதுன்னே எனக்குத் தெரி யல... அவளோட இருக்கிற சபேஷ் அப்பனைப் போலவே மோசமான ரகம்.”

இவள் குரலை ஒரு கிசுகிசுப்புடன் சொல்ல,

அவன் தெளிவுபடுத்தினான்.

“கள்ளிச் செடியைப் பயிரிட்டால் கத்தரிக்காயா விளையும். சபேஷ் யார்? அம்பரிஷோட மகன்.”

உண்மைதான்.

காமினி எல்லாவற்றையும்...

ஆமாம்... எல்லாவற்றையும்தான் அறிவாள்- மிகமிக நெருக்கமாக...

அப்பாவும்... மகனும் ஒரே பெண்ணைத் தொட்டு...

அவர்களுக்கிடையே எந்தவிதமான பேதங்களும் கிடையாது.

ஒரு வெட்கக்கேடானது- அசிங்கமான ஒன்றையும் இங்கே சொல்லித்தான் ஆகவேண்டும். சமுதாயத் தில் உள்ள சில மேல்மட்டக் குடியினர் இன்னும் இப்படித்தான் இருக்கிறார்கள்

அதாவது...

தன்னையே...

மகன் சபேஷ் முதலில் தொட....

அடுத்தபடியாக... தந்தை அம்பரீஷ்... மகன் தந்தை ஆகிய இருவருக்குமே ஒரே இரவில் ஆசை நாயகி!

காமினியைப் பொறுத்தவரையில் தன்னுடைய வாழ்க்கை நரகமாகி விட்டது என்பது தெரியும். பலர் தன்னுடைய அழகான உடலுக்குச் சொந் தம் கொண்டாட முடியும். ஆனால் சுரபி அப்படி யல்ல.... அது ஒரு வெள்ளரிப்பிஞ்சு... முட்டையி ருந்து வெளியே வந்து உலகத்தை எட்டிப்பார்க்கும் கோழிக்குஞ்சு மனம் கொண்டவள்.

தாய்க்கோழியாக இருந்து சூழ்ந்து வரும் பருந்துக ளிடமிருந்து அவளைப் பாதுகாக்க வேண்டும்?

அவளுக்கு நன்றாகவே தெரிந்தது

ஆட்டக்காரியாக இருந்து ஒருவனைக் காதலித்து ஒரே நேரத்தில் தன்னுடன் தாய் வயிற்றில் குடியி ருந்த அக்கா இறந்து போயிருப்பாள் என்பதில் ஐய மில்லை.

அவள் கடத்திச் செல்லப்பட்டு புதைகுழியி னுள்ளோ... நெருப்பு வாயினுள்ளே போயிருக்க லாம்.

நிச்சயமாக எஞ்சியிருக்கும் தங்கை சுரபிக்கும் அப் படியொரு பரிதாப முடிவு வந்து விடவே கூடாது.

சுரபி படிக்க வேண்டும். நன்றாகப் படிக்க வேண் டும்.- கேரளாவிலேயே அவளுக்கு நிகரான படிப்பா ளிகள் இல்லை என்று சொல்ல வேண்டும்.

அந்த அளவுக்கு அவள் தேர்ச்சி பெற்று காவல் துறையில் உயர்பதவி வகிக்கவேண்டும். அவள் தன் அதிகாரபலத்தைத் துணைகொண்டு சமூக விரோதிகளை ஒடுக்கவேண்டும்.

இப்படியெல்லாம் நினைத்து தங்கையைப் பற்றிய இனிய கனவுகளிலேயே வாழ்க்கையில் ஒரு வசந் தத்தை எதிர் நோக்கிப் பிடிப்பை உண்டு பண்ணிக் கொண்டிருந்த இவள் இப்பொழுது மனம் நொறுங் கிப் போய்விட்டாள்

யாரை அருவருப்பான ஒரு பிராணி என்று ஒதுக்கி வைத்திருந்தாளோ அந்த கயவனுடன், இவளுக்கு இப்பொழுது புரிகிறது முன்பு இவன் தான் பெண் குரலில் டெலிபோனில் பேசியிருக்கிறான்!

இவள் சபி என்று சொன்னது சபேஷ் என்ற பெய ரைக் கொண்ட அவனைத்தான்!

தங்கையே அவன் மீதுள்ள மயக்கம் காரணமாக தன்னை ஏமாற்றி விட்டாள் சுரபி... அவனுடன் அந் தரங்கமாகப் பழகி.

ச்சே... அப்படியெல்லாம் இருக்கமுடியாது... சுரபி சின்னஞ்சிறு மொக்கு! விரியும் பருவத்தில் இருக் கும் ரோஜா...

இவள் மனம் போராட்ட களமாக மாறியிருந்தது.

"என்னங்க அப்படியே வெறிக்க வெறிக்கப் பார்த் திட்டிருக்கிறீங்க"

அவன் கேட்டதும் இவள் தோளைக் குலுக்கி னாள்.

அவளை கண்ணீர் ஈரக்கோடு போட்டிருக்கும் கண்களோடு பார்த்தாள்.

"ஒன்றுமில்லை."

"சுரபியைக் கண்டிக்கப் போறீங்களா?"

"என்ன செய்யறதுன்னுதான் யோசித்துக் கொண் டிருக்கிறேன். அப்புறம் முடிவு செய்யறேன்... இது ஹோட்டல்... ஜனங்க உட்கார்ந்துப் சாப்பிட்ராங்க... இங்கே வைத்துக் கண்டித்தால் தப்பாகி விடும்" இவள் சொன்னதை மதன் அப்படியே ஒப்புக் கொண்டான். பெயரர் வந்து பில் கொடுக்க மதன் பணம் வைக்க முயன்றதும் தடுத்து விட்டாள்

"ந்நோ... வேண்டாம்... எனக்கு அந்தத் தகுதி இல்லை..."

தகுதி என்ற எழுத்துக்களை அவள் உச்சரித்த போது குரல் நெகிழ்ந்து விட்டது. கண்களிலிருந்து

நீர் தெளித்து விட்டது. இவளே பணத்தை எடுத்துத் தட்டில் வைத்து விட்டு எழுந்தாள்.

அவனுக்கு முன்னால் ஒளிந்து கொண்டு நடந்த போது சிந்தித்தாள்.

இன்னொரு கொலையும் செய்துதான் ஆக வேண் டுமா?

கொலை செய்யாவிட்டால் வாழ்க்கையில் நிம்ம தியே ஏற்படாதா?

# 12

"சுரபி... உனக்கு இப்படியொரு மயக்கம் தரும் பெயரை வைத்த உன் அப்பாவையும் அம்மாவை யும் பாராட்டுறேன்." சபேஷ் மெலிதான குரலில் சொன்னான்.

வந்து அரை மணி நேரமாக அந்த ஹோட்டலின் தடுப்பறையிலேயே இருந்தான்

இது வசதியான ஹோட்டல்... காதலர்களின் பார டைஸ் என்று கூடச் சொல்லலாம்.

அவன் சுரபியின் கால்களைத் தொட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான்

இவளுக்கு இவ்வளவு பெரிய உருண்டு திரண்ட வடிவான கால்களா? கரண்டைகளும். பாதங்களும் கடைசல் போல...

இவனுடன் பழக்கமாகி சில தினங்கள்தான் ஆகின்றன- ஆனால் பல ஆண்டுகளாக ஒட்டி உற

வாடிக்கொண்டு பழகியது போன்ற சொந்தமான உணர்வுகள்

இருப்பினும் இன்னும் அவள் தன்னுடைய ஆடை களை நெகிழ்த்திப்பார்க்க அனுமதித்ததில்லை தொட்டாலும் கையைப் பிடித்து ஒதுக்கி விடுவாள்.

பாராட்டுகிற அந்த இரண்டு பேர்களும் நான் ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபோதே இந்த உல கத்தை விட்டுப் போய் விட்டார்கள்.

“நீ அதிர்ஷ்ட க்காரி”

“எப்படி...”

“அறியாப் பருவத்தில் நீ அவர்களை இழந்தாய்... அப்பொழுது உனக்குத் துயரம் பற்றி எதுவுமே தெரிந்திருக்காது... இப்பொழுது என் உள்ளம் ஓசையின்று அழுதுகொண்டே இருக்கிறது. அப் பாவை நெருப்புக்குக் கொடுத்தேன். அதைத்தான் சொல்றேன்.”

தொண்டைக்குள் கரகரப்பை நிறைத்தான். உண் மையாகவே தந்தையின் இழப்பில் அவனுக்கு வருத்தம் எதும் கிடையாது..... இனி தந்தையை நினைத்துக் குழப்பான அச்சத்திற்கு இடம் தராமல் சந்தோஷமாக இருக்கலாம். தட்டிக் கேட்பதற்கு ஆளின்றி ஏராளமான பெண்களை தொடலாம்.

“அழுவாதீங்க சபி...”

“அழுகையை அடக்க முடியல. சுரபி... நான் மன முடைந்து போயிருக்கிறேன்- இழப்பினால் ஏற்பட்ட படுகாயத்தை நீதான் மருந்து காடுத்து குணப்ப டுத்த வேண்டும்”

“படுகாயமா... - மருந்தா... குணமா... எனக்குப் புரியல.”

“புரியல.... இப்ப தானே நீ ப்ளஸ் டு படிக்றே... போகப் போக எல்லாம் சரியாகி விடும்”

சொன்னவன் தொடையில் கைவைத்ததும்

“வேண்டாங்க” என்று சொல்லி உடம்புக்கூச்சத்துடன் கையை விலக்கி விட்டாள்.

அவன் கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டி கொண்டான் வருத்தமாக முகத்தை வைத்துக் கொண்டு சோகம் கொடுத்து பார்த்தான். ஏக்கத்தால் விழித்தான்.

“போலாமா?”

“அதுக்குள்ளே கோபத்தைப்பாரு...”

“பின்ன என்ன... நானோ நெருப்புக்கு அப்பாவைத் தூக்கிக் கொடுத்துவிட்டு அழுது கொண்டிருக்கிறேன் அந்தக் கவலையே என்னைச் சாகடிச்சிடும் போல் இருக்கு... நீ என்னைப் புரிஞ்சுக்கிட்டுச் சந்தோஷப்படுத்துவேன்னு நினைச்சேன்... ம்...”

அவன் ஏக்கமாகப் பார்த்தான்.

சுரபி அய்யோ பாவம் என்று இரங்கினாள் பெண்களுக்கே உரிதான இந்த இரக்கம் தானே அவர்களுக்கே பலவீனமாக அமைந்து வாழ்க்கையையே வீணடித்துவிடுகிறது.

சுரபிக்கு இந்த உலகத்தின் நெளிவு சுழிவுகளைப் பற்றி என்ன தெரியும்?

“நா... நான் என்ன செய்யணும்?”

“எனக்கு மனசு சரியாக இல்லை... செத்துப்போயிட லாமாங்கிர எண்ணம் அடிக்கடி வருது...”

அவன் ஒரு சிறு விசும்பலுடன் இதைச்சொன்னதும் சுரபி பதறிப் போனாள்.

“அப்படி வரவே கூடாது சபி... உனக்காக நான் ஒருத்தி இருக்கிறேன் எங்கிறதை மறந்திடாதே... நீ வாழனும்.”

பேதைப் பெண்... ஏமாளி என்பதால் கண்களில் நீர் சுரந்து வழியலாமா வேண்டாமா என்று யோசித்தது

புதுமயக்கம் இளமை அரும்புகளின் வேகம்... பற்றிக் கொண்டால் ஒட்டிக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பு

அவன் இவளுடைய கையைப் பிடித்துக் அவிழ்த்து புறங்கையைத் தடவி அதன் மென்மையை ரசித்தான்.

சுரபியின் உடம்பு பூராவும் உஷ்ணமாகி ஏகப்பட்ட சந்தோஷத்தில் மலர்ந்தாள். பூரிப்பு எல்லா பிரதேசங்களையும் தடவியது.

“நான் மட்டுமல்ல... நீயும் தான்.... நாம் ரெண்டுபேர்களும் இணைந்தே வாழுவோம்”

சொன்ன சபேஷ் பார்வையைத் தாராளமாக வழங்கி இவளுடைய கொழுந்து வெற்றிலை போன்ற இளமையின் செழிப்பு எந்தெந்த இடங்களிலிருந்து ஆரம்பமாகின்றன என்று தீவிரமாக ஆராய்ந்தான்.

கலப்படமில்லாத சுத்தமான உடம்பு

“சுரபி”

“சொல்லுங்க.... கேட்டுக்கிட்டுத்தானே இருக்கி றேன்”

“என் மேல் உனக்கு அன்பு இருக்கிறதா... இல் லையா?”

“இதென்னெங்க ஃபூலிஷ் கொஸ்டியன்... உங்க மேல் அன்பு இல்லைன்னா இப்படி பக்கத்தில் உட் கார்ந்து பேசுவேனா?”

“சுரபி...”

“ம்...”

“உங்கிட்டே நான் மனம்விட்டுப் பேசணும்... இன் னிக்கு ராத்திரி நான் கூப்பிட்ர இடத்திற்கு வரு வாயா?”

சுரபி பதறினாள்.

ராத்திரியில் அவன் கூப்பிடுகிற இடத்திற்குப் போக வேண்டுமாம். ராத்திரி எந்த இடத்திற்குக் கூப்பிடு கிறான்?

“எதற்கு அங்கே”

“பேசணும்”

“அது தான் இங்கேயே பேசிட்டிகிறீயே...”

“மண்டு... மண்டு... உனக்கு ஒன்றுமே புரிய வில்லை”

சொன்னவன் காதோரமாக உதடுகளைக் கொண்டு கிசுகிசுத்ததும்

இவள் முகம் 'குப்பென்று' வியர்த்து சிவந்து “ச்சீய்” முகம் சுழித்தாள்.

சபேஷ் பிரமாதமாக இவளை ரசித்து விட்டு, “இப்போது நீ இன்னும் அழகாக தெரியற... சரியாக எட்டு மணிக்கு உங்களோட கேனன் காட்டேஜுக்கு வரணும்” என்று சொன்னான்.

இவள் அதிர்ந்தாள்

“கேனன் காட்டேஜுக்கா? அது மலைக் காட்டினுள் அல்லவா இருக்கிறது...”

“இருந்தால் என்ன? பஸ்ஸில் ஏறி வந்தால் கொஞ்ச தூரம்தானே நடக்கணும்... ஒன்பது மணிக்கெல்லாம் என்னுடைய காரில் ஏற்றி வந்து உன்னை வீட்ல பத்திரமாகச் சேர்த்திடுவேன். இன்றிரவு பத்து மணிக்கு உன் அக்கா புரோகிராம் எங்க ஹோட்டலில் இருக்கு.”

“அவள் டூட்டியில் சரியாக இருப்பாள். அதனால நீ வெளியேவர தடங்கல் இருக்காது”

இரவில் சுரபி வர ஒப்புக் கொண்டாள்.

அவன் உள்ளம் ஆனந்தக் கிரீச்சலுடன் விசிலடித்தது.

# 13

இந்தப் பூனையா கொழுத்த எலியைப் பிடித்து 'நருக் நருக்' என்று கடித்து விழுங்கியது

வீட்டுக்கு வந்த சுரபியைப் பார்த்தபோது அப்படித்தான் காமினிக்கு நினைக்கத் தோன்றியது. அவளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மனத்திற்குள்ளாகவே தீர்மானித்திருந்தாள்.

சுரபி இன்னும் பக்குவப்படாத மனநிலையுள்ள வள்.

கடிந்து கொண்டால் விபரீதமான விளைவுகள் ஏற் படலாம். காதலைக் கண்டித்தால் மேலும் உச்சத் திற்குப் போய் விடலாம்... தடுக்கவும் முடியாது.

அவள் மனத்தில் சந்தேகமும் எழக்கூடாது.

காமினி செயற்கையான ஒரு புன்னகையுடன்,

“ஏன் இவ்வளவு லேட்?” என்று கேட்டாள்.

“ஸ்பெஷல் கிளாஸ் இருந்தது அக்கா... கெமிஸ் டிரி கிளாஸ் செம போர்.” பேச்சில் எத்தனை முகம் சுழிப்பு. சலிப்பு.

கைதேர்ந்த இளசு நடிகைகள் கூட இவளிடம் நடிப்புக் கற்றுக் கொள்ளவேண்டும்.

இவளுக்கா ஒன்றும் தெரியாது? ஸ்கூல் யூனிஃபார உடையுடனேயே எவ்வளவு ஒயிலாக சபேஷுடன் இழைந்து நடைபோட்டு ஹோட்டலினுள் வந்தாள். மற்றவர்கள் பார்ப்பார்களே என்ற அச்சம் எதுவும் அவளிடம் இல்லை.

அவனுடன் உல்லாசமாகப் பேசி ஒரு மணி நேரத்தை விழுங்கிவிட்டு எவ்வளவு அலட்சியமாக வருகிறாள். காமினிக்கு நிஜமாகவே நடிக்கத் தெரி யும் - மனம் எப்படி இருந்தாலும் ஹோட்டலில் பல ருக்கு மத்தியில் மைக்கைப் பிடித்துச் கொண்டு எவ்வளவு குதூகலச்சிரிப்போடு பாடுகிறாள்!

கல்வீச்சுடன் - உடம்பின் அசைவுகளுடனும் முத் திரைகளைத் தவற விட்டுவிட்டு எவ்வளவு லாவக மாக மேற்கத்திய ஸ்டைலில் நடனம் ஆடுகிறாள்...

காமினி அவளைப் பார்த்தபடியே வேதனையை நெஞ்சில் இருத்திப் புன்னகைத்துக் கொண்டிருந் தாள்

இந்த உலகில் யாரை நம்புவது?

"படிப்பை போர் என்றெல்லாம் சொல்லக் கூடாது." காமினியும் தங்கையைப் போலவே நடித்தாள்.

அவள் டிரஸ்ஸிங் அறையினுள் சென்ற திரும்பி வந்த போது உடம்பில் மஞ்சள் கட்டங்களில் சாக் லெட் நிற பாவாடை ஐம்பரில் தாவணி இடம் பெற்றி ருந்தன.

ஆயா அச்சம்மா விளக்குகளை ஏற்றிவிட்டு இரு பூஸ்ட் பானக் கோப்பைகளோடு வந்து ஆளுக் கொன்று வீதம் கொடுத்தாள்.

சுரபி பானத்தை உறுஞ்சினாள்.

இன்னும் சபேஷ் ஞாபகம் தான்! அவன் ஸ்பரிசம் பட்ட இடம் இன்னும் குதூகலமான கிளுகிளுப் பையே உண்டு பண்ணிக்கொண்டிருந்தது. அவன் புதுமையானவன்

பார்வையிலேயே ஏராளமான சந்தோஷங்களை எடுத்து ஊட்டி மகிழ்ச்சி செய்து விடுவான்.

அவள் ஷோபாவில் வந்து அதன் முதுகில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு ஏறிட்டாள்.

எதிர் ஷோபாவில் காமினி அமர்ந்து வாரப் பத்தி ரிகை ஒன்றில் மூழ்கியிருந்தாள்.

"அக்கோவ்"

காமினி பத்திரிகையை மூடி டீபாய் மீது வைத்து விட்டு ஏறிட்டாள்.

"என்ன!"

"இன்னிக்கு உனக்கு புரோகிராம் இல்லையா?"

இவள் நெஞ்சுக்குள் சுரீர்ரென்று உறைத்தது.

நிச்சயமாக இதில் ஏதோ ஒரு திட்டம் இருக்கிறது... சபேஷ் எப்படிப்பட்டவன் என்னென்ன செய்வான் என்பது அனுபவ ரீதியாகவே இவளுக்குத் தெரியும். அப்பனை நிற்க வைத்து தாண்டும் ரகம்!

"ம... இருக்கே... அம்பரீஷ் ஹோட்டல் ரிஸார்ட்ஸ்ல ஸாங் வித் டான்ஸ்..."

சுரபியின் உள் மனத்தில் இருப்பதைக் கிரகித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் அவன் இவளை இரவில் எங்கேயாவது அழைத்திருக்ககூடும்.

"அம்பரீஷ் செத்ததிற்கு ஒரு நாள் மட்டும் தான் லீவு விட்டிருக்கிறாங்க"

"ஆமாம்... அம்பரீஷ் ஹோட்டல் ரிஸார்ட் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்...."

"அக்கோவ்..."

"என்னம்மா..."

"நீ எத்தனை மணிக்குப் போகணும்?"

"சரியாக எட்டு... பத்து மணிக்கு ப்ரொகிராம் அட்டெண்ட் பண்ணணும்..."

"தாட்ஸ் ஓக்கே..."

இவள் கைகளை ஷோபாவின் மேல் பக்கத்தில் வைத்துக்கொண்டு உடம்பை நெளித்தாள். கொட்டாவி விட்டாள்.

ரப்பர் போன்ற உடம்பு நெளிந்து மதர்ப்பு அதிகரித்தது.

"அக்கோவ்..... நம்மோட கேனன் காட்டேஜில் நைட் வாச்மேன் யாரும் கிடையாதா...?"

இவளுக்கு பகிரென்றது.

கேனன் காட்டேஜைப் பற்றி எதற்காக திடீரென்று விசாரிக்கிறாள்?

காமினிக்குப் புரிந்து விட்டது.

உலகம் புரியாத - கன்றுக்குட்டி மனம் கொண்ட சுரபியை அவன் அங்கே வரச்சொல்லியிருக்கிறான்! இவளுடைய மருளும் கண்கள் அதைச் சொல்லாமல் சொல்லுகின்றன!

"எதுக்கும்மா கேட்கிறே..."

"சும்மாதான்!"

சும்மா கேட்கிறீயா...? சுரபி நான் உனக்கு அக்கா... எல்லாவித ஞானங்களிலும் தேர்ச்சி பெற்ற அனுபவசாலி! என்னை உன்னால் ஏமாற்ற முடியாது.

"பகலில்கூட வாச்மேன் கிடையாது."

இரவு ஏழுமணி.

சுரபி முகம் சூரியகாந்திப் பூவாகியது.

ஆயா அச்சம்மா பரிமாற காமினியும் சுரபியும் பக்கத்துப் பக்கமாக உட்கார்ந்துச் சாப்பிட்டார்கள்.

இரண்டு பேர்களும் வெவ்வேறு விதமான எண்ணங்கள்

சாப்பிட்டு முடிந்ததும் வழக்கம்போல் ஆயா கோப்பைகளில் பசும்பால் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள்.

சுரபி கை அலம்ப வாஷ்பேசின் போனபோது காமினி தயாராகப் பொடித்து வைத்திருந்த தூக்கமாத்திரைப் பொடிகளை அவள் கோப்பையில் போட்டுவிட்டு எடுத்துக்கொடுத்தாள்.

“பால் இன்று வேண்டாம் அக்கா...”

“ஏன்?”

“வயிறு திம்மினு ஃபுல்லாயிடுச்சு....”

“பரவாயில்லை..... பால் ஹெல்த்துக்கு நல்லது”

கட்டாயப்படுத்தி பாலைபுகட்டிவிட சுரபி இப்பொழுது நிஜமாகவே கொட்டாவி விட்டாள்.

இமைகளுக்குள் கண்கள் சொருகின.

“அக்கா... தூக்கம்.....”

இன்னொரு கொட்டாவியும் வர- காமினி இரு குழந்தையைப் போல் அவளைத் தாங்கிப் பிடித்து வழி நடத்திச் சென்று கட்டிலில் பரப்பினாள்

போர்வையை உதறி விரித்துக் கழுத்து வரையில் போர்த்திவிட்டு, “குட் நைட்” சொன்னாள்

அவளைப் பாதுகாத்து விட்டோம் என்ற பெருமிதம்

# 14

நிலவு சற்றுத் தாமதித்து வந்த போதிலும் மேகங்களின் தடுப்பின்றி வானம் சுத்தமாகத் துடைக்கப்

பட்டிருப்பதால் வெளிச்சம் ஓடி இரவைப் பகலாக்கி யிருந்தது.

“காமினி தன்னுடைய மாருதிக் காரை ஓட்டி வந்து மறைவான ஓரிடத்தில் நிறுத்தினாள்.

வீட்டினுள் வந்து விளக்குகளைப் போட்டாள். கத வைச் சாத்தி கொண்டி போட்டாள்.

ஷோபாவில் அமர்ந்துச் சிந்திக்கலானாள்

இனியும் சபேஷை உயிர் வாழ அனுமதிப் பது பாவம்- தந்தையின் அடிச்சுவட்டிலேயே நடக் கும் அவன் எத்தகைய பாதகங்களையும் செய்யத் தயங்க மாட்டான்.

சபேஷை அதே பாணியில் கொன்று கொன்று விட்டு...

கொன்றுவிட்டு...

உடலை இழுத்துச் சென்று பின்புறமாக உள்ள இடத்தில் குழி தோண்டிப் புதைத்து விடலாம். சொத சொதப்பான மணல் பாங்கான இடம் என் பதால் குழி தோண்டுவது கடினமான காரியம் அல்ல...

இவள் சிந்தனையாக அமர்ந்திருந்தபோது ஜன் னல் கர்ட்டன் வழியாக இரு வெளிச்சங்கள் தெரிந் தன.

கார் வந்துகொண்டிருக்கும் எஞ்சின் ஒலி...

அவன் தான் வந்து கொண்டிருக்கிறான்!

காமினியின் உடம்பு பூராவும் ஒரு பரபரப்பு ஓடியது.

இங்கே வரப்போகும் சபேஷைக் கொல்லத் தயாரா னாள்,

உள்ளே வெளிச்சம் ஓட கார் வந்து நின்று அடங்கும் சப்தம் -

கதவு திறந்து அடைக்கப்படும் ஓசை

அடுத்த நிமிஷம்

காலிங் பெல் 'கிர்கிர்' என்று நாதமாக ஒலித்துக்கூப்பிட்டது.

எழுந்தாள்

குபீரென்று ஒரு பரபரப்பு, ஒரு மூர்க்கம்

கொண்டியை அகற்றிக் கதவைத்திறக்க –

சபேஷ் அல்ல...

இன்னொரு முக்கிய பார்ட்னரான சீமான் குரு மூர்த்தி வழிதலான ஒரு பார்வையுடன் நின்று கொண்டிருந்தான். அவனை இவள் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

“காமினி... நீயா... உனக்கு இன்னிக்கு டான்ஸ் புரோகிராம் இருக்கே... போகலியா?”

“ப்ரோகிராம் நைட் பத்து மணிக்குத்தான்!”

காமினி முகத்தில் எந்தவிதமான உணர்வுகளும் இல்லாமல் பேசினாள்.

“நீங்க யாரையோ தேடி, விலாசம் தெரியயாமல் இங்கே வந்திட்டீங்க போலிருக்கே அங்கிள்?”

அவன் அசடு வழிந்தான்

குடித்துவிட்டு போதை ஏறி வந்திருந்ததால் இன்னதான் பேசவேண்டும் என்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை.

“சுரபி உள்ளே இருக்கிறாளா?”

அவன் கேட்டதும் இருதயம் தெறித்து ஓடிவிட்ட தைப் போல் காமினி அதிர்ந்தாள்.

யூகித்தாள்

அவனுக்கும் சபேஷுக்கும் இடையே ஓர் ரகசியம் நடந்திருக்கிறது. சுரபியை அழைத்து வந்து இங்கே தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறான்.

இந்த வீட்டின் இரண்டு சாவிகளில் ஒன்று ஏற் கனவே ஹோட்டல் அதிபர்களின் அறையிலும் இருந்தது.

முக்கியமான விருந்தாளிகள் தவிர்க்க முடியாத நெருக்கடி ஏற்படும் போது இங்கே ஓர் இரவு மட்டும் தங்கவும் அனுமதிக்கப்படுவார்கள்.

அதிபர்கள் இருவரும் கேட்டுக் கொண்டதற்கி ணங்க காமினி அந்த வசதியைச் செய்து கொடுத் திருந்தாள்

ஆனாலும் இவள் சம்மதமின்றி யாரையும்... எத் தகைய பெரிய மனிதரையும் இங்கே அனுப்பி வைத்து விடமுடியாது.

இப்பொழுது சுரபியைத் தேடிக் கொன்டு அவன் வந்திருக்கிறான்.

“சுரபி இங்கே வரப்போவதாக உங்களுக்கு யார் சொன்னது அங்கிள்”

நெஞ்சுக்குள் அக்னி எரிமலை வெடித்துக் கொண்டிருந்த போதிலும் உதடுகளில் ஈரமுள்ள புன்னகையுடனேயே கேட்டாள்,

அவன் பல்லிளிப்போடு வெட்கத்தோடு சொன் னான்.

"நம்ம பையன் சபேஷ்தான் நானும் அவனும் இதி லேயும் பார்ட்னருங்க... கிழட்டுச் சிங்கம் ஓடர மான் குட்டியைத் துரத்திப் பிடிக்க முடியாது பாரு"

நெஞ்சுக்குள் பூகம்பமே வெடித்து விட்டது

சபேஷ் வயதென்ன... இவன் வயதென்ன... லஜ் ஜையின்றி பார்ட்னர்கள், இரண்டு பேர்களுமே பெண்கள் விஷயத்தில்

"ஆங்க்க... மறந்துட்டேனே... காமினி... இன்னிக்கு உனக்கு புரோகிராம் ஆச்சே... மறந்திட்டியா..?"

"இல்லை... பத்து மணிக்குத்தான் அங்கே ப்ரோ கிராம். இங்கே சின்னதாக ஒரு ஒத்திகை பார்க்க வேண்டியிருக்கு... இன்னிக்கி நைட்ல ரத்த காளி நடனம். ரத்த அழைப்பு விடுத்து ஆடுவேன்."

"ரத்த அழைப்பா... அப்படின்னா என்ன?"

"சொல்ரேன்..."

அவன் புரியாமல் விழிக்க இவள் உள்ளறையினுள் சென்று கயிற்றை எடுத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து -

அதன் முனைகளை இரண்டு கைகளிலும் ஓரே இறுக்காக இறுக்கி விட்டாள். பிடித்துக் கொண்டு கழுத்தில் தூக்கிப்போட்டு

"ஹக்..க்க்க்க்க்.. ஏ...ஏ...ஏ... ஈ..ஈ."

அவன் திணறி தூண்டிலில் வாயைக் கொடுத்து விட்ட மீனைப்போல் துள்ளி அப்படியும் இப்படியு மாக உதறினான்.

காமினி மூர்க்கா வேசம் கயிற்றை இன்னும் இறுக்கி...

“இதுக்குப் பேரு தாண்டா ரத்த அழைப்பிதழ்... நீ செத்த பிறகு நரகத்திற்குப் போய் நிதானமாகப் படித்துப்பார்... கிழட்டுப்பயலே என் தங்கச்சியோட மல்லிகை முல்லை உடம்பாடா உனக்கு வேணும்? சொறி நாயே..”

கோப உறுமலுடன் இவள் ஆவேசமாகச் சொல்லிக் கொண்டே மேலும் பலமாக இறக்கினாள்.

காறினாள்

ப்ளக்கென்று அவன் முகத்தில் துப்பினாள்.

அந்த வினாடியே

அவன் கண்கள் இரண்டும் வெளியே புடைத்துக் கொண்டு வந்துவிட- நாக்கு ஒரு சாண் நீளத்திற்கு வந்தது.

வாய் வழியாகவும் மூக்கு வழியாகவும் ரத்தம்

செத்துப் போனான்

நிற்க முடியாமல் துவண்டுச்சரிய முற்பட்ட போது -

வெளியே இருந்து கார் வெளிச்சம் பரவியது.

சபேஷ் காரில் ஆசையாக வந்து கொண்டிருக் கலாம். இவனை விடவும் அவன் அயோக்கியன் அவனையும் கொல்ல வேண்டும். வழி... அவனு டைய தந்தைக்குக் காட்டிய அதே ஈண வழி தான்!

உடலை இழுத்துச்சென்று பக்கத்து அறைனுள் போட்டு கதவை மூடி விட்டு சிதறிக் கிடந்த ரத்தத் துளிகளைக் கொண்டு ஒரு கடிதம் கிறுக்கி விட்டு பிறகு சுத்தமாகத் துடைத்து எடுக்கலானாள்.

காமினி நெஞ்சுக்குள் இன்னும் ஆவேசம் சீறியது.

# 15

கண்டஸா காரை மௌனிக்கச் செய்து விட்டு இறங்கிய சபேஷ் முழுக்கைச் சட்டையிலும் பட்டு வேட்டியிலும் தெரிந்தான்.

இரண்டுமே உயர்ரக பட்டு ரகங்கள்

அவன் ஏராளமாகக் குதூகலித்து ஏகப்பட்ட சந் தோஷத்தில் இருந்தான்.

தந்தையையும் விடவும் அதி சாமர்த்தியங்களைப் பிரயோகித்து வெற்றி பெற்று விட்டதாக நினைப்பு

சுரபியைப் பயன்படுத்தி சீமானை வீழ்த்தி சொத் துக்கள் பூராவையும் சுருட்டிக் கொள்ளலாம் என்ற நப்பாசை

அதற்காக அவன் எத்தனை சுரபிகளை வேண்டு மானாலும் பலியிட தயாராக இருந்தான்.

படியேறி வீட்டினுள் நுழைந்த அவன் சுரபியை ஆவலோடு எதிர்பார்த்தான்.

ஹாலினுள் காமினி நின்று கொண்டிருக்கவே துணுக்குற்றான்

“நீ... நீ... ஹோட்டலுக்குப் போகலியா... உன்னை அங்கே எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருப் பாங்களே...”

அவன் தடுமாறும் இருதயம் தப்புத் தப்பாய் துடித் தது.

மூச்சு பெரிது பெரிதாய் வெளியேறி ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தியது.

வருவதாக ஒப்புக் கொண்ட சுரபி ஏன் வரவில்லை? அவளுக்கு என்ன ஆயிற்று இவள் எப்படி இங்கே வந்தாள்?

"பத்து மணிக்குத் தானே நான் அங்கே இருக்க ணும்..."

"ஆமாம்... இன்னும் ஒரு மணி நேரம் இருக்கு..."

அவன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு நிலை கொள் ளாமல் திகைத்தான்.

கைகளைப் நடந்தான். பிசைந்து கொண்டு அப்படி யும் இப்படியுமாக நடந்தான்.

சுரபியைப் பற்றி இவளிடம் எப்படி விசாரிப்பது?

இவள் ஒருமாதிரியான ரகம்

தங்கை என்றால் இவளுக்கு உயிர்...

"என்ன தேடறீங்க...? எதுக்காக இங்கே வந்தீங்க...?"

"ரியலி போர்... இந்த வீட்டு டூப்ளிகேட் சாவி ஹோட் டலில் இருந்ததாலே எடுத்துக்கொண்டு வந்தேன்"

காமினி அவனைக் கவனித்தாள்.

பார்த்த இடங்கள் சரியல்ல...

"என்ன காமினி... அறிமுகம் இல்லாத ஆளைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டு லெட் அஸ் ஹாப்பி..."

சொன்னவன், பழைய உரிமையோடு இவள் தோளில் கைபோட்டான்.

உடனே இவள் தோளைச் சுருக்கிக் கொண்டு கையை எடுத்துவிட்டாள்,

இன்றைக்கு நான் ஆடணும், அதற்கு முன்னால் அழைப்பிதழை எடுத்துக்கிறீங்களா...?"

"அழைப்பிதழா?"

"ஆமாம், இது புதுவிதமான அழைப்பிதழ், நான் விடுக்கும் ரத்த அழைப்பிதழ். எனக்கு அதிகமாக சந்தோஷம் வந்துவிட்டால் இப்போது இதைத்தான் கொடுப்பேன்."

சொன்னவள் தயாராக மடித்து கைக்குள் வைத்திருந்த ஒரு துண்டுக் காகிதத்தைக் கொடுத்தாள்

அதில் ரத்தத்தில் எழுத்துக்கள் கிறுக்கப்பட்டிருந்தன

அது சீமான் குருமூர்த்தியின் உடம்பிலிருந்து வழிந்த ரத்தம் என்பது அவனுக்குத் தெரிந்திருக்க முடியாது.

அந்த எழுத்துக்கள்

**இன்பத்துள் இன்பம் கொலை இன்பம்!**

அவன் படித்துவிட்டு எதுவும் புரியாமல் விழித்தான்.

இன்பத்துள் இன்பம் கொலை இன்பமாமே, காமினியின் மூளை தடம்புரண்டு விட்டதா? இவளுக்கு என்ன ஆயிற்று?

"காமினி, தமாஷ் பண்றீயா?" சொன்னபோது விஸ்கி வாசனை வந்தது.

பள்ளியில் படிக்கும் காலத்திலும் குடித்தனம்! மோசமான வழிகளில் பணம் சம்பாதித்து விட்டால் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது அர்த்தமல்ல.

“ஆமாம், தமாஷ்தான் பண்றேன். என்ன இருந்தாலும் நீ என் மச்சான் இல்லையா?”

சொன்னவள் – நிறுத்தி முறைத்தாள்

“சுரபியைத் தொடலாம்னு ஆசையாக இங்கே வந்தியா. நீயும் சுரபியும் ஜோடி போட்டு ஹோட்டலுக்கு வந்ததை நான் பார்த்தேன்.

அவன் அதிரவில்லை. எதையும் சமாளிக்கும் தைரியம்.

இவள் என்ன தான் செய்துவிட முடியும் என்ற அலட்சியம்.

உடம்பில் ஊறிப்போன கர்வம்

“அப்படியா... அப்பா செத்துப் போனதினால் மனசு சரியில்லை... அதனால சந்தோஷம் தேவைப்பட்டது. வந்தேன்... சுரபி வீட்ல தான் இருக்கிறாளா?”

சுரபி என்ற பெயரை அவன் உச்சரித்ததும் இவள் நெஞ்சு தீக்குண்டமாகி விட்டது. கீழுதட்டைக் கடித்துக் கொண்டு கோபத்தை விழுங்கினாள்,

“இல்லை, இங்கேயே வருவாள், அதுக்கு முன்னால ஒரு சின்ன கேள்வி, என்னோட அக்கா நிருபமா எங்கே?”

“நிருபமாவா, அவள் தான் ஓடிப் போய் விட்டாளே?”

“ஓடிப்போன அவளை அழைத்துச்சென்று நாசமாக்கிக் கொன்று உடலைப் புதைத்து விட்டதாக உன் அப்பன் சொன்னான் இது உனக்குத் தெரியுமா?”

“தெரியாது, இந்த நேரத்தில் அவளைப் பற்றின பேச்சு எதற்கு?”

“ஆமாம், இனி பேசி பயன் இல்லை”

சொல்லிக்கொண்டே அவள் இடுப்பில் மறைத்து வைத்திருந்த சிரிஞ்சியை எடுத்தாள். அவன் குழப் பமாய் மோவாயைச் சொரிந்து கொண்டிருந்த போது பக்கமாக வந்தாள்

சிரிஞ்சியைப் பின்னால் மறைத்துக் கொண்டு,

“சபேஷ்...”

“ம்...”

“இப்படி வாயேன். உன்னை எம்பரேஸ் பண்ணனும் போல இருக்கு, சுரபியை நினைத்து கண்களை மூடிக் கொண்டு என்னைத் தொடு நான் உனக்குப் பரிச்சியமாகாதவள் இல்லை”

அவன் முகம் சுழித்தான்.

“இந்த நேரத்தில் இப்படியும் அற்ப சபலமா?”

சலிப்புடன் சொல்லி கைகளை அகல விரித்துக் கொண்டு வந்து இவள் உடம்போடு பதித்ததும். காமினி ஊசியை நறுக்கென்று அவன் தொடைப்ப குதிக்கு மேலாக இறக்கி விட்டாள்.

அவன் குபீரென்று உஷ்ணம் பரவியதை உணர்ந்து அதிர்ந்தான்.

இதயம் திடீரென்று வேகமாக படபடத்தது.

கால்கள் நிற்கும் சக்தியை இழக்கின்றன என்பதை அவனால் உணரமுடிகிறது - கீழே விழப்போகி றோம் என்பதும் புரிகிறது.

அடுத்த வினாடி அப்படியே சரிந்து விழுந்தான்.

காமினி இப்பொழுது மூர்க்காவேசமாய்ப் பார்த் தாள்.

பற்களைக் கடித்துக் கொண்டு தீர்க்கமாய்ச் சொன் னாள்.

“சபேஷ், நீ மரண வினாடிகளை எண்ணும் நேரம் வந்து விட்டது. போட்டிருப்பது பாயிஷென் இஞ்ச க்ஷன், உன் அப்பன் பெண்களை அடைய இதே இஞ்சக்ஷன்களைத்தான் பயன்படுத்துவான். சில மணி நேரம் அதன் பவர் ரத்தத்தில் இருக்கும். அதன்பிறகு சீரான நிலைமை ஏற்படும்”

அவள் கூற

இவன் பயங்கரத்தை உணர்ந்துத் துடித்தான்,

எழுந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கி றது. ஆனால் உடம்பின் எந்த உறுப்புகளையுமே இயக்கமுடியவில்லை.

ஏராளமாக வியர்த்து பெரும் பீதியுடன் நரம்புகள் தளர்ந்து மூச்சுத் திணறலாய்த் தடுமாறினான்.

“உன் அப்பனுக்கு இதே இஞ்சக்ஷனைப் போட் டேன்.

மூக்கை நறுக்கினேன். அழகைச் சீர்க்குலைத் தேன்.

குற்றுயிராக்கி கால்களைப் பிடித்து வெளியே இழுத்துச் சென்று மேட்டிலிருந்து ஆற்றுக்குள் தள் ளிக் கொன்று விட்டேன்..

இவள் சொன்ன வார்த்தைகளை இவனால் காது கொடுத்துக் கேட்க முடிகிறது. ஆனால் இந்த ஆபத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்

ளும் மார்க்கம் எதுவும் தெரியவில்லை. உதடுக ளைப் பிரிக்க முடியவில்லை.

நாக்கை அசைக்க முடியவில்லை.

"சீமான் குருமூர்த்தியை ஒரே இறுக்கில் கொலை செய்து விட்டேன். பாடி பக்கத்து ரூமில் கிடக்குது." அவன் சொன்னதும்

இருதயம் பிய்த்துக் கொண்டு வெளியேறி விட்டது போல் நச்சென்று அதிர்ந்தான்

ஈரல் குலையைப் பிடித்து இழுத்துக்கொண்டு யாரோ ஷவரக் கத்தியால் அரிகிறார்கள்.

"என் தங்கையோட பிஞ்சு உடம்பை இரண்டு பேர் களுமாகச் சேர்ந்து பங்கு போடப் பார்த்தீங்க அல் லவா? இனி சாவிலும் நீ பங்கெடுத்துக் கொள் வதே நியாயம். உன்னோட மரணத்துடன் ஒரு பயங் கரக் கும்பலே அழிந்துவிடும். வாடா என் ஆசை மச்சானே... நானே உனக்கு மரண தண்டனையை நிறைவேற்றுகிறேன்."

சொன்னவள் குனிந்தாள்

இடுப்பிலிருந்து கத்தியை எடுத்து விரித்தாள்.

மூக்கின் அருகே கொண்டு போனாள்

அவனுக்குப் புரிகிறது.

தன்னுடைய அழகான மூக்கை அறுக்கப் போகி றாள் என்று....

ஆனால் முகத்தைத் திருப்பவோ, வாயைத் திறந் துக் கத்தவோ முடியவில்லை. இன்னும் வியர்த்து - நடுங்கி... துடியாய்த் துடித்த போது

சரக்கென்று மூக்குத் தண்டில் கத்தி இறங்கி ரத்தம் பீய்ச்சியடித்தது.

மூக்குத் துண்டம் கையுடனேயே வந்து விட்டது. அவன் எம்பினான் ஆயினும் அசைக்க முடிய வில்லை வழியும் ரத்தத்தைப் பார்க்க முடிகிறது கையைக் கொண்டுபோய் துண்டான மூக்கைப் பிடித்து ரத்தத்தை நிறுத்த முடியவில்லை.

"உன்னைப் போன்ற அயோக்கியர்களுக்கு என் னைப் போன்ற ஒரு பெண்ணால் இதைத்தான் பாவத்தின் சம்பளமாகத் தர முடியும்."

சொல்லி குபீரென்று சிரித்து ஒரு வெறித்தனத் தோடு இரு கால்களையும் சேர்த்து அள்ளிக் கொண்டு மரக்கட்டை போல் பரபரவென்று இழுத் துச் சென்றாள்.

அவன் சாகவேண்டும்

கொடூரமாகச் சாகவேண்டும்.

# 16

நிலவு தண்ணொளியைக் கொடுத்து அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தது,

நடக்கப் போகும் பயங்கரத்திற்கு நிலவு தான் சாட்சி!

சபேஷின் கால்களைப் பற்றி இழுத்துவந்த காமினி கரையோர மேட்டில் வைத்துக் கொண்டு கீழே குனிந்து பார்த்தாள்

மிகவும் ஆழத்தில் தண்ணீர் பளபளப்பாய் ஓடிக் கொண்டிருப்பது நிலவொளியின் வெளிச்சத்திலிருந்துத் தெரிந்தது.

காமினி ஒரு மூர்க்காவேசத்துடன் அவனை உருட்டித் தள்ளியதும் -

இவள் மரணக் கூச்சலிட்டாள்

நின்றிருந்த மேட்டுப்பகுதி இடிந்து இவளுடன் சேர்ந்துப் பெயர்ந்து விட்டது

பயங்கர அலறலுடன் தலை கீழாகப் போய்க் கொண்டிருந்தாள்

# 17

மறு நாள் காலை

அரபிக்கடல் அதிகக் கொந்தளிப்பு இல்லாமல் அடங்கிப் போய் இலேசான அலைகளை உற்பத்தி செய்து கொண்டிருந்தது.

கரையோரம்

சுரபி நின்ற நிலையிலேயே தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்க- பெயரர் மதன் அவளுடைய புஜத்தைப் பிடித்து இழுத்துச் சமாதானப் படுத்தியபடியே இருந்தான்

ஒரு சின்ன கும்பல் கதறும் அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் மம்முட்டியும், போலீஸாரும், சுறுசுறுப்பில் தெரிய

சபேஷ் உடல் ஒரு பக்கமாகவும்–

காமினி உடல் இன்னொரு பக்கமாகவும் கிடக்க

அலைகள் அமைதியாகத் தழுவிக் கொண்டிருந்தன.

முற்றும்